ISSN 1391-9504

Vijey விஜய்

# விஜய்

22.01.2014 - மலர் 10, இதழ் 47

# யார் இந்த கடற்கொள்ளையர்கள்?



ஈழநில குறுக்கெழுத்து வெற்றியாளர்கள்

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன விண்வெளி நிலையம்



சீனாவின் முதலாவது தேசிய விண்வெளி நிலையத்தை 2023 ஆம் ஆண்டு ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக சீனாவின் 64 ஆவது சர்வதேச விண்வெளியாளர் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விண்வெளி நிலையத்தின் பணியாளர்கள் குழாம் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதில் ஒரு குழு குறுகிய கால விண்வெளி நடவடிக்கைகளுக்காகவும் மற்றைய குழு நீண்டகால நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. குறுகிய கால நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள குழுவின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 6 ஆகும். மற்றைய குழுவில் உள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை 3 ஆகும். சீனாவின் முதலாவது விண்வெளி வீராங்கனையான லியு யெங்கும் இந்தக் குழுவில் அடங்கியுள்ளார். மூன்று கெப்சூல்களால் இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதன் மத்திய மொடியூல் ஆனது, இரு ஆய்வுகூடங்களையும் போக்குவரத்துக்கான உபகரணங்களுக்கான களஞ்சிய சாலையையும் கொண்டுள்ளது. இதன் நீளம் 18.1 மீற்றராகும். அதன் நிறை 20-22 மெட்ரிக் தொன் ஆகும். இந்த விண்வெளி மத்திய நிலையத்தின் அறையொன்று 60 சதுர மீற்றர் விசாலமானதாகக் காணப்படுகின்றது.

**லோங் மார்ச் ரொக்கெட், சென்ஷு விண்கலம், டியேங்கொங் மற்றும் சீன விண்வெளி மத்திய நிலையம் பற்றிய படவிளக்கம்**




-ஜெயகர்

விஜய் — TOP NEWS இணைந்து வழங்கும் மாதம் ஒரு Galaxy Smartphone...

கல்விசார் APPS கள்

பிரதி புதன்கிழமைகளில் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு மாத இறுதியிலும் 'Top News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விகளுக்கான சரியான விடையினை அம்மாதத்தில் வெளிவந்த 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வெல்லுங்கள்

Phone இனை வெல்வதற்கான கேள்வி 31.01.2014 அன்று 'Top News' இல் இடம்பெறும்.




இந்த Smartphone ஆனது, பல்வேறுபட்ட அறிவுசார் Tamil/Sinhala/English Dictionary, English Grammar Test, Math Solver, Science Bank, MS Work-2013, Picture Dictionary Tamil, IQ Test, General Knowledge Questions போன்ற பல்வேறுபட்ட அறிவுசார் Apps களை நிறுவும் வசதி கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

'Top News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்குத் தெரிவுசெய்யப்படும். (கூப்பன் மாத இறுதியில் பிரசுரமாகும்)

சரியான விடையை அனுப்புவோரில் மாதாந்தம் ஒரு அதிர்ஷ்டசாலி தெரிவுசெய்யப்பட்டு அவருக்கு ஒரு Samsung Galaxy Star GT-s5282 Duos Phone பரிசாக வழங்கப்படும்.

கீழே காட்டப்பட்டுள்ள வாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற் படுத்திக் கொள்ளுங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk

# சில விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் பொதுவான நடத்தையொன்று கண்டுபிடிப்பு!

*அரிசோனா பல்கலைக்கழகத்தின் மானிடவியல் விஞ்ஞானியான டேவிட் ரேய்ச்லன் தலைமையிலான குழுவினர், ஆபிரிக்காவின் ஹெட்ஸா பழங்குடியினரின் நடத்தை ஒன்று தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு மிகவும் முக்கியமான கண்டுபிடிப்பு ஒன்றைச் செய்துள்ளனர்.*



ஆபிரிக்காவின் ஹெட்ஸா பழங்குடி கோத்திரத்தார் தமக்கான உணவினைத் தேடிக்கொள்ளும் நடத்தை



தொடர்பிலேயே இந்த கண்டுபிடிப்பு அமைந்துள்ளது. ஹெட்ஸா பழங்குடியினர் உணவு தேடிச் செல்லும்போது பின்பற்றும் நடத்தையானது 'லெவி வோக்' (Levy walk) எனப்படும் கணித முறையினை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளதாக இந்த ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

உணவுகளைத் தேடிச் செல்லும்போது ஹெட்ஸா பழங்குடியினர் பின்பற்றும் இந்த நடத்தையானது சுறா, தேனீக்கள் போன்ற சில உயிரினங்களாலும் பின்பற்றப்படுகின்றது என்று ஆய்வுகளின்போது தெரிய வந்துள்ளது. ஆகவே, பண்டைய வேட்டைக்காலத்தில் வாழ்ந்த மனிதர்களின் நடத்தைகளையும் நடைமுறைகளையும் பற்றி மிக முக்கியமான தகவல்களை இந்தக் கண்டுபிடிப்பினூடாக அறிந்துகொள்ள முடியும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

மானிடவியல் விஞ்ஞானியான டேவிட் ரேய்ச்லன் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட ஆய்வுகள் தொடர்பான முடிவுகள் 'ப்ரொசீடிங்ஸ் ஒஃப் த நெஷனல் எக்கடமி ஒஃப் சயன்ஸஸ்' என்ற சஞ்சிகையில் வெளியாகியுள்ளன.

'லெவி வோக்' எனப்படும் இந்த நடத்தை முறையினை பெரும்பாலும் விலங்குகளிடமே காண முடியும். இரைகளைத் தேடிச் செல்ல விலங்குகள் நீண்ட நேரத்தை எவ்வாறு எடுத்துக்கொள்கின்றன? என்பது குறித்து ஆய்வாளர்கள் அடிக்கடி அவதானத்தை செலுத்தி வந்தனர். இதன்போதே, வேட்டையாடி உணவு சேகரித்த பண்டைய கால மனிதர்களின், உணவு தேடிச் செல்லும் நடத்தை முறையானது, விலங்குகளின் நடத்தை முறையை ஒத்திருக்கலாம் என ஆய்வாளர்கள் அனுமானித்தனர். இந்த அனுமானத்திற்கு ஏற்ப ஆய்வுகளை முன்னெடுப்பதற்காக, ஆபிரிக்காவின் ஹெட்ஸா பழங்குடியினரின் நடத்தைகளை அவதானிக்கத் தீர்மானித்தனர். அதன்படி, ஆராய்ச்சிகளை முன்னெடுத்தனர். ஹெட்ஸா பழங்குடியினர் இன்றும்கூட நடந்து திரிந்தே தமது உணவுகளைத் தேடிக் கொள்கின்றனர். உணவுகளைத் தேடிச் செல்லவென இன்றும் பாரம்பரிய நடைமுறைகளையே அவர்கள் பின்பற்றுகின்றனர். இவர்கள் பூமியில் உள்ள இறுதிப் பழங்குடியினரின் ஒரு பகுதியினராவார்கள்.

உணவு தேடிச் செல்லும் போது, ஹெட்ஸா பழங்குடியினர் எவ்வாறு பயணிக்கின்றனர் என்பதை அறிந்துகொள்ள ஆய்வாளர்கள் அவர்களின் கைகளில் ஜி.பி.எஸ்.வசதி கொண்ட உபகரணத்தினைப் பொருத்தியிருந்தனர். இதனடிப்படையிலேயே ஹெட்ஸா பழங்குடியினர் லெவி வோக் நடத்தை முறையினைப் பின்பற்றுகின்றனர் என்பதை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். -இ



முஸ்லிம் SMS (தமிழில்)
உங்கள் Dialog தொலைபேசியில்
அல் குர்ஆன் வசனங்கள்.
ஹதீஸ்கள் & நற்சிந்தனைகள்.
துஆக்கள் & முக்கிய முஸ்லிம் நிகழ்வுகள்.
REG MUSLIM என Type செய்து 77000 க்கு SMS செய்யவும்
போன்றவற்றை தினமும் SMS ஊடாக பெற உடன் செயற்படுத்துங்கள்

கிறிஸ்தவம் SMS (தமிழில்)
உங்கள் Dialog தொலைபேசியில்
கிறிஸ்தவ பைபிள் வசனங்கள்.
தேவ வார்த்தைகள் & சிந்தனைகள்.
மத போதகர்களின் நற்சிந்தனைகள்.
REG CHR என Type செய்து 77000 க்கு SMS செய்யவும்
போன்றவற்றை தினமும் SMS ஊடாக பெற உடன் செயற்படுத்துங்கள்.

இந்து SMS (தமிழில்)
உங்கள் Dialog தொலைபேசியில்
சைவ சமய நடத்தைகள் & ஆன்மிக விடயங்கள்.
சைவ சமய பெரியார் சிந்தனைகள்.
மற்றும் பல சைவ சமய குறிப்புக்கள்.
REG HIN என Type செய்து 77000 க்கு SMS செய்யவும்
போன்றவற்றை தினமும் SMS ஊடாக பெற உடன் செயற்படுத்துங்கள்.

Speak ENGLISH /SINHALA
உங்கள் Dialog தொலைபேசியில் தினமும்
ஆங்கிலம், சிங்களம் SMS ஊடாக கற்றுக்கொள்ள
அருகில் காட்டப்பட்டவாறு செயற்படுத்தவும்.
REG TOP என Type செய்து 77000 க்கு SMS செய்யவும்
(அரச, தனியார் வேலைவாய்ப்புகளையும் இதில் பெறலாம்)

உங்கள் Dialog தொலைபேசியில் POEM SMS
கவிதைகள் (Friendship,Mother,Life Motivation & Etc.)
விடுகதைகள், Thoughts, Jokes, IT தகவல்கள்.
போன்றவற்றை SMS ஊடாக பெற்றிடவும்
உங்கள் POEM களை உங்கள் பெயருடன் பகிரவும் உடன் செயற்படுத்துங்கள்.
REG POEM என Type செய்து 77000 க்கு SMS செய்யவும்

விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
DIPLOMA IN ENGLISH கிலாஸ் போகாமலே இங்லீஸ் படிக்கலாம்.
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
மேலதிக விபரங்களுக்கு
முழுப்பெயர், முகவரியைக் குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
@- 10 பாடத்தொகுதிகள் தமிழ் விளக்கத்துடன்
@- ஆங்கில பேச்சுப்பயிற்சி / உரையாடல் வீடியோ சீடி 1 ஒன்று
@- Video CD வழிகாட்டி புத்தகம் ஒன்று.
@- அழகிய கைக்கடிகாரம் (Watch) ஒன்று./ மாணவர் அடையாள அட்டை
@- Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன வழங்கப்படும்.
மேலதிக விபரங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.
பாடநெறிக்கட்டணம். ரூபா 1600/= மாத்திரம் அறவிடப்படும். மாற்றுக்கட்டணம் இல்லை.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 081-222 77 11 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமை



ஆற்றங்கரையோரத்தில் மூன்று கொக்குகள் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. எங்கு சென்றாலும், ஒற்றுமையுடன் அவை சென்றன. இரை தேடச் சென்றாலும் கிடைத்த இரையை கூடிப் பகிர்ந்து உண்டு வாழ்ந்து வந்தன. இவற்றை அவதானித்த நரி ஒன்று, அந்த மூன்று கொக்குகளையும் பிரித்தே தீருவேன் என்று சபதமிட்டபடி களம் இறங்கியது.

ஒருநாள் மூன்று கொக்குகளும் வயல் வரப்பில் இரை தேடிக்கொண்டிருந்தபோது அந்த நரி தன் சூழ்ச்சியை ஆரம்பித்தது. அதன்படி, முதலில் மூன்று கொக்குகளிடமும் நட்பை ஏற்படுத்திக்கொண்டது. சிறிது நாட்களின் பின்னர் தனிமையில் இருந்த ஒரு கொக்கிடம் சென்று "கொக்கு நண்பரே! இவ்வளவு அழகாக இருக்கும் நீங்கள், அவலட்சணத்தின் மொத்த உருவமாகத் திகழும் உங்கள் நண்பர்களான கொக்குகளுடன் எப்படி நட்புப் பாராட்ட முடிகிறது? உங்கள் அழகுக்கும் அந்தஸ்துக்கும் இது ஏற்ற காரியமா?" என்று கேட்டது.

இதனைக் கேட்ட கொக்கிற்கு நரி சொன்னது உண்மையோ என்ற சந்தேகம் ஏற்பட, "என்ன செய்வது! எல்லாம் என் நேரம்தான்" என்றது. வந்த காரியம் முடிந்த திருப்தியில் நரியும் அவ்விடம் விட்டுச் சென்றது.

பின்னர் நரி இரண்டாவது கொக்கிடம் சென்று "கொக்கு நண்பரே எப்படி உள்ளீர்கள்?" என வினாவியது.

"நலம் நரி நண்பரே" என்று பதிலுக்கு கொக்குக் கூறியது. நரியும் அந்த இரண்டாவது கொக்கிடம், "கொக்கு நண்பரே! நீர் எவ்வளவு அறிவுடையவர். எந்தக் குளத்தில் எவ்வளவு மீன்கள் உள்ளன என்பதை உம் அறிவால் கண்டுபிடித்துவிடக்கூடியவர். அவ்வளவு அறிவுடைய நீர் ஒன்றும் தெரியாத உங்கள் நண்பர்களான கொக்குகளுடன் நட்புக் கொள்வதா" என்று தன் சூழ்ச்சியைக் கிளப்பிவிட்டது.

நரி கூறிய வார்த்தைகளால், இரண்டாவது கொக்கிற்கு சிந்தனை எட்டிப்பார்க்க நரி, தான் வந்த வேலை முடிந்த திருப்தியில் கிளம்பிப் போனது. அத்துடன், நில்லாமல், மூன்றாவது கொக்கிடமும் சென்றது நரி.

அதனிடம், "கொக்கு நண்பரே! நீங்கள் எவ்வளவு வீரம் படைத்தவர். இரை பிடிப்பதிலும்! பறப்பதிலும், எவ்வளவு திறமைவாய்ந்தவர். இவ்வளவு வீரம் உடைய நீங்கள் ஒன்றுக்கும் உதவாத உங்கள் கொக்கு நண்பர்களுடன் சுற்றித் திரியலாமா? உங்கள் வீரத்திற்கே இது இழுக்கு அல்லவா" என அதனிடம் கூறியது.

நரியின் சூழ்ச்சியால் அந்த மூன்று கொக்குகளுக்கிடையில் நாளடைவில் பகைமையும், யார் பெரியவன் என்ற சண்டையும் ஏற்பட்டது. அத்துடன், ஒன்றுடன் ஒன்று அவை சண்டை போட்டுக்கொண்டன. இதனால், ஒற்றுமையுடன் இருந்த மூன்று கொக்குகளும் தனித்தனியே பிரிந்தன.

நடந்ததை கவலையுடன் பார்த்துக்கொண்டிருந்த கிளி ஒன்று, மூன்று கொக்குகளையும் சந்தித்து நரியின் சதித்திட்டத்தைக் கூறியது. "எங்கள் ஒற்றுமையை நிலைகுலைய வைத்து விட்டானே! நல்ல நட்பை இழந்தோமே" என்று வருந்தின கொக்குகள்.

கிளியும் "சரி சரி இனி வருத்தப்படாதீர்கள் முன்பின் தெரியாதவர்கள் வந்து திடீரெனத் தேவையில்லாமல் புகழ்ந்தால் அல்லது புறங்கூறினால், அதற்கு வசப்பட்டுவிடாதீர்கள். அப்படி ஒரு பலவீனம் உங்களுக்குக்குள் இருந்தால் உங்களை மற்றவர்கள் விரைவில் தங்கள் வசப்படுத்திவிட முடியும். உங்கள் மூவர் விடயத்திலும் அதுதான் நடந்துள்ளது. இனியாவது திருந்தி வாழுங்கள்" என்று கிளி அறிவுறுத்தியது. இதன் பின்னர் மூன்று கொக்குகளும் மறுபடியும் நட்புடன் இனிதே வாழ்ந்து வந்தன.

# எளிய பாடம்

விருதூர் என்ற ஊரில் ரங்கன் என்றொரு செல்வந்தன் இருந்தான். அவனுக்கு முன்னோர்கள் சேர்த்து வைத்த பெருஞ்செல்வம் வீடு, நிலபுலன்கள் அனைத்தும் இருந்தன. அவன், பண்ணையிலும், வீட்டிலும் பல பணியாட்கள் வேலை பார்த்து வந்தனர். இத்தனை செல்வமும் வசதியும் இருந்தாலும், அவனுக்கு ஒரே ஒரு குறை மட்டும் இருந்தது. அது என்னவென்றால், சிறிது காலமாகவே அவன் இரவில் தூக்கம் வராமல் தவித்து வந்தான்.



ரங்கனின் நண்பன் பாலு. ரங்கனும் பாலுவும் சிறுவயது முதலே ஒன்றாகப் படித்தவர்கள் என்பதால், இருவருமே தங்கள் இன்ப துன்பங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வர். ரங்கன் தன் நண்பனான பாலுவைச் சந்தித்து, சமீபகாலமாக, தான் தூக்கம் வராமல் தவிப்பதைப் பற்றிக் கூறினான்.

பாலுவும் சிறிதுநேரம் யோசித்து விட்டு, 'கவலைப்படாதே ரங்கா! எனக்குத் தெரிந்த சிறந்த நாட்டு மருத்துவர் இருக்கிறார். அவரிடம் சென்று உனக்கு வைத்தியம் செய்தால், நன்றாகத் தூக்கம் வரும். ஆனால், அந்த வைத்தியர் நம் ஊரின் அருகிலுள்ள மலைமீது வசிக்கிறார். நாம் நாளை காலை சென்று அவரைப் பார்க்கலாம். ஆனால், மலையடிவாரம் வரைதான் நாம் வண்டியில் செல்லமுடியும். அதற்கு மேல் நடந்துதான் செல்ல வேண்டும். உனக்குச் சம்மதமா?" என்று கேட்டான். எப்படியேனும் தனக்கு இரவில் தூக்கம் வந்தால் போதும் என்று நினைத்த ரங்கன் அதற்குச் சம்மதித்தான்.

மறுநாள் காலையில் இருவரும், ஒரு மாட்டு வண்டியில் மலையடிவாரத்தை அடைந்தனர். அங்கிருந்து மலைமீது இருவரும் நடந்தபடியே ஏறிச்சென்றனர். மலைமீது ஏறிச் செல்ல ரங்கன் மிகவும் சிரமப்பட்டான். ஆனால், பாலுவுக்கு ஏற்கனவே நடந்து பழக்கம் இருந்தமையால், எளிதாக ஏறிச் சென்றான். கிட்டத்தட்டப் பல மணி நேரப் பயணத்தின் பின்னர் இருவரும் மலை உச்சியை அடைந்தனர்.

அங்கே ஒரு மரத்தடிக்குச் சென்ற பாலு, திடீரென்று யோசனை செய்தவனாய், "ஐயோ, மறந்தே போய் விட்டேனே... இன்று அந்த மருத்துவர் அயலூருக்குச் செல்லும் நாளாயிற்றே... நாம் நாளை வந்து இவரைச் சந்தித்து மருந்து வாங்கலாம்!" என்றான். ரங்கனுக்குக் கடுமையான கோபம் வந்தது. அவன் பாலுவைத் திட்டித் தீர்த்தான். பின்னர் இருவரும் இறங்கி வந்தனர். மலையடிவாரத்தில் நின்றிருந்த வண்டியில் வீடு வந்தனர். பாலுவும் விடைபெற்றுச் சென்றான்.

மறுநாள் ரங்கனைத் தேடி பாலு வந்தான். அவன் ரங்கனிடம், "இன்று மருத்துவரைப் பார்க்கச் செல்லலாமா?" என்று கேட்டான். ரங்கனோ "வேண்டாம் பாலு! நேற்றிரவு என்னை அறியாமலேயே நன்றாக தூங்கிவிட்டேன். காலை கண்விழித்தபோதுதான் உண்மையைப் புரிந்து கொண்டேன். நீ நேற்று என்னை மலைக்கு அழைத்துச் சென்றதில் நன்றாக நடந்து களைத்துப் போயிருந்தேன். அந்தக் களைப்பில் தூங்கியும் விட்டேன். உண்மையிலேயே சொல்... மலைமீது மருத்துவர் இருக்கிறாரா?" என்று கேட்டான். அதற்கு பாலு, "அப்படி எந்த மருத்துவரும் இல்லை. தினமும் எந்த வேலையும் செய்யாமல், வீணே உட்கார்ந்து பகலில் தூங்கிக் கொண்டு இருந்தால்; இரவில் எப்படித் தூக்கம் வரும்? பகலில் நன்றாக உழை; இரவில் தானாகத் தூக்கம் வரும். இதுதான் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கான எளிய வழியும் கூட. உன்னிடம் பொய் சொல்லி, மலைமீது அழைத்துப் போனதற்காக என்னை மன்னித்துவிடு!" என்றான்.

"நான் உன்னை மன்னிக்க வேண்டியதில்லை. நீ எனக்கு எளிய பாடத்தின் மூலம் வாழ்வின் உண்மையைப் புரிய வைத்துவிட்டாய். உனக்கு நன்றிதான் நான் சொல்ல வேண்டும்!" என்று மகிழ்ச்சியோடு சொன்னான் ரங்கன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2013, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



வெலேகொட முஸ்லிம் வித்தியாலய மாணவியான எம்.ஆர்.பரீரா, 141 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



எஃப்.இல்மா, 153 புள்ளிகளைப் பெற்றுள்ளார். அ/கனதரா கட்டுகெலியாவ மு.ம. வித்தியாலய மாணவியான இவர், சலீம்-வாஜிதா தம்பதியரின் புதல்வியாவார்.



இர/அல்-மினாரா வித்தியாலய மாணவனான ஷாஹிட் அகமட், 179 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், முனாப்-ஹினாயா தம்பதியரின் புதல்வராவார்.



வி.நிக்ஷன், 83 புள்ளிகளைப் பெற்றுள்ளார். தெஹி/நூரி தமிழ் வித்தியாலய மாணவனான இவர்,வெல்சன்-அந்தோனியம்மா தம்பதியரின் புதல்வராவார்.



. எஃப்.சபியா, 160 புள்ளிகளைப் பெற்றுள்ளார். பறகஹதெனிய தேசிய கல்லூரி மாணவியான இவர், சபீக்-சம்லிஹா தம்பதியரின் புதல்வியாவார்.



எம்.ராஸிதா, 167 புள்ளிகளைப் பெற்றுள்ளார். பறகஹதெனிய தேசிய கல்லூரி மாணவியான் இவர், மாஹிர்-ரிஷானா தம்பதியரின் புதல்வியாவார்.



களு/அல்-பாஸியதுல் நஸ்ரியா மு.பா.ம.வித்தியாலய மாணவியான எஃப்.சல்ஹா, 122 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், பதியுத்தீன்-முர்ஸியா தம்பதியரின் புதல்வியாவார்.



எஸ்.கே.சாய்ராவ், 131 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கு/சீ.சீ.தமிழ் வித்தியாலய மாணவராவார்.



எஃப்.அஷ்பா, 152 புள்ளிகளைப் பெற்றுள்ளார். கம்/தாருஸ் ஸலாம் ஆரம்பப் பாடசாலை மாணவியான இவர், பாரூக்-சுலைஹா தம்பதியரின் புதல்வியாவார்.



எம்.ஹமாஸ், 135 புள்ளிகளைப் பெற்றுள்ளார். தி/ஸாஹிரா கல்லூரி மாணவனான இவர், சிராஜ்-சர்மிளா தம்பதியரின் புதல்வராவார்.

## யா/பெரியவிளான் றோ.க.த.க.பாடசாலை



ஏ.ஜே.ஆகாஸ், 171 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஜெயக்குமார்-யுடெக்சியா தம்பதியரின் புதல்வராவார்.



ல.அபிஷேக், 164 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், லதிஸ்லாஸ்-மேரி அபர்ணா தம்பதியரின் புதல்வராவார்.



கி.அகலொளி, 163 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கிருபாகரன்-றஞ்சினி தம்பதியரின் புதல்வியாவார்.



மனா எடிசன், 162 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஜெகன்-ஜான்சி இசபெல்லா தம்பதியரின் புதல்வராவார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்வன குடும்பத்திற்குரிய மிகப் பெரிய குழுவாக ஓணான்களைக் கருத முடியும். உலகில் 3,700 ஓணான் வகைகள் வசிக்கின்றன. எனினும் பனிபடர்ந்த வட துருவப்பகுதிகளிலும் அதேபோன்று கடலிலும் இவற்றைக் காண முடிவதில்லை.





# ஓணான் குடும்பத்தின் அபூர்வ உறுப்பினர்கள்

## இதோ ஓணான்கள்!

ஓணான் குடும்பத்தின் மிகப் பெரிய உறுப்பினராக 'கொமோடோ ட்ரகன்' களைக் கருத முடியும். அவ்வாறே, மிகவும் சிறிய உறுப்பினராக பல்லிகளைக் குறிப்பிட முடியும் (சில பல்லிகள் 2 செ.மீ நீளம்கூட இருக்க மாட்டா). ஒரே ஓணான் குடும்பத்தைச் சேர்ந்த ஓணான்களிடையேயும் அவற்றின் சரீர அளவு, வடிவம் என்பனவற்றில் பாரியளவு வேறுபாடு களைக் காண முடியும். ஏனைய ஊர்வனங்களைப் போன்றே ஓணான் குடும்பத்திலும் பெண் ஓணான் களே முட்டையிடுகின்றன. முட்டைகள் வெடித்துக் குஞ்சுகள் வெளிவரும் வரை பெண் ஓணான்கள் மண் அல்லது கற்களுக்கிடையே மறைந்திருந்து முட்டைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றன.

## ஓணான்களின் நிறம்

தாம் வாழும் சூழலுக்கு ஏற்ப நிறத்தை மாற்றிக்கொள் ளும் ஆற்றல் ஓணான்களுக்கு இயற்கையாகவே உண்டு. தற்பாதுகாப்புக்காகவே அவை இந்த ஆற்றலைப் பயன்படுத்திக்கொள்கின்றன. மரங்களில் வசிக்கும் ஓணான்கள், மரங்களின் நிறத்தைப் பெறுகின்றன. இலைகளுக்கிடையே மறைந்து வாழ்பவை- இலைகளின் பச்சை நிறத்தைப் பெறுகின்றன. பாலைவனப்பகுதிகளில் வசிப்பவை - பாலைவனப்பகுதிகளின் மண் நிறத்தைப் பெறுகின்றன; இல்லாவிட்டால் கபில நிறத் தைப் பெறுகின்றன. சூழலுக்கு ஏற்ப உடல் நிறத்தை மாற்றிக்கொள்ளும் ஆற்றல் என்பது ஓணான்களுக்குக் கிடைத்த ஓர் அரிய வரப் பிரசாதமாகவே உள்ளது.

## ஓணான் வாலின் விபரம்



பூனைகள், பறவைகள் என்பன ஓணான்களை இரையாக்கிக்கொள் ளும் நோக்கத்துடன் அவற்றின் வால் பகுதியைப் பற்றிப் பிடிக்கும் போது, அதிலிருந்து தப்பிக்க அவை ஓர் உபாயத்தினைக் கடைப்பிடிக் கின்றன. அதாவது, இத்தகைய இக்கட்டான நிலைமைகளின்போது, சிலவகை ஓணான்கள் தமது வால்ப்பகுதியைக் கழற்றி விடுகின்றன. கழன்று விழும் வால்ப்பகுதி சற்று நேரம் துடித்துக்கொண்டிருக்கும். திகைப்படைந்த எதிரிகள் அதனை ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டி ருக்க, அந்த சந்தர்ப்பத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள் ளும் பல்லிகளும் இதர இவ்வகை ஓணான்களும் எதிரிகளிடமிருந்து விரைவாக தப்பிச் சென்றுவிடுகின்றன.



## எனோல் ஓணான்கள்

எனோல் ஓணான்களில் பல வகைகள் உள்ளன. எனோல்கள் மத்திய மற்றும் தென் அமெரிக்க உலர் வலயப்பகுதிகளில் வசிக்கின்றன. இவை கோபமடைந்துவிட்டால், அவற்றின் கழுத்துப் பகுதியில் இருக்கும் பை போன்ற அமைப்பினைப் பெருப்பித்துக் காட்டிக்கொள்ளும். இவை 'அமெரிக்கன் கெமிலியன்' என்றும் அழைக்கப்படுகின்றன.



## கிலா மொன்ஸ்ட்டர்

உலகில் விஷம் கொண்ட ஓணான் வகைகள் இரண்டு மட்டுமே உள்ளன. அவற்றில் ஒன்றுதான் 'கிலா மொன்ஸ்ட்டர்' ஆகும். மற்றையது 'மெக்ஸிகன் பீடட்' எனப்படுகிறது. இந்த இரண்டும் கடித்தால் விஷத்தை உமிழ்ந்துவிடுகின்றன. வட அமெரிக்காவின் தென்பகுதிகளிலேயே இவை வசிக்கின்றன. உலர்ந்த-அடர்ந்த காடுகள் கிலா மொன்ஸ்ட்டரின் வசிப்பிடங்களாகும். பகல் பொழுதில் அப்பகுதிகளில் மறைந்து வாழும் கிலாக்கள், இரவில் வெளியே வந்து எலிகள், பறவைகள், முட்டைகள் ஆகியவற்றை உணவா கக் கொள்கின்றன.

## மந்தமாக நகரும் புழு

'புழு' என்று கூறினாலும், இது புழு இனமன்று. மாறாக, ஓணான் குடும்பத்தைச் சேர்ந்ததாகும். மந்தமாக நகரும் தன்மை



கொண்டது என்றாலும் ஆபத்து நேரங்களில் அதிவேக ரயிலைப் பேன்று செயற்படும் ஆற்றல் காணப்படுகின்றது. இவை ஐரோப்பா, வட ஆபிரிக்கா, தென்கிழக்கு ஆசியா போன்ற பகுதிகளின் அடர்ந்த காடுகளில் வசிக்கின்றன. நத்தைகள், சிலந்திகள், பூச்சி வகைகள் இவற்றின் உணவுகளாகும். இந்த புழுக்களின் குட்டிகள், பெரிய புழுக்களின் தோற்றத்தினை ஒத்ததாகவே பிறக்கின்றன. நன்கு வளர்ந்த புழுவொன்று 50 செ.மீற்றர் வரை நீளம் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## ஓணான் குடும்பத்தின் மன்னன்

ஓணான் குடும்பத்தின் ராட்சதன் 'கொமோடோ ட்ரகன்கள் ஆகும். இவை 10 அடி வரை நீளத்தைக் கொண்டவை. இவற்றின் உணவு முறை ஏனைய ஓணான்களின் உணவு முறையை விட வேறுபட்டதாகும். இறந்த விலங்குகளின் உடலங்களையே இவை அதிகமாக உட்கொள்ளும்; கழிவுகளையும் உட்கொள்ளும். இவை தவிர; மான்கள், பன்றிகள், காட்டுப் பன்றிகள் என்பனவும் கொமோடோ ட்ரகன்களின் ஏனைய உணவுகளாகும். இந்த ராட்சத ஓணான்கள் இந்தோனேஷியாவின் கொமோடோ தீவிலும் ஜாவா தீவுகளின் கிழக்குப்பகுதியில் உள்ள ஏனைய தீவுகளிலும் வசிக்கின்றன.

## முள் பேய்

சிறு மண் குவியலின்மீது பல முட்களைக் குத்தி வைத்தாற்போல் தோன்றும் இந்த வகை ஓணான் 'முள் பேய்' என்று அழைக்கப்படுகின்றது. இதன் மூக்குப்பகுதி முதல் வால் முனை வரை கூரான முட்கள் உள்ளன. தாம் பெற்றிருக்கும் தோற்றத்தைப் போன்ற கரடுமுரடான- கடினமான - உலர்வான சூழலிலேயே இவை வசிக்கின்றன. எறும்புகளே இவற்றின் ஆகாரமாகும். உடலளவில் இவை சற்று சிறியதாகும்.



டொகே பல்லியின் விசேட அம்சம், மிகவும் விசித்திரமாக அமைந்துள்ள அதன் அடிப் பாதங்களாகும். நுணுக்குக்காட்டியில் மாத்திரம் தென்படக் கூடிய அளவிலான மிகச் சிறிய மயிர்கள் அவற்றின் அடிப்பாதங்களில் காணப்படுகின்றன. இதனால், டொகே பல்லிகளால் எந்தவோர் இடத்திலும் இலகுவாக வசிக்க முடியும்.

## டொகே பல்லி



## நீர் ஓணான்

ஏரிகள், ஆறுகள், குளங்கள் ஆகியவற்றை அண்மித்த பகுதிகளில் உள்ள மரங்களில் வசிப்பதற்கு ஆர்வம்கொண்ட இந்த ஓணான்களின் தாயகம் ஆசியாவாகும். ஏனைய ஓணான்களுக்கு பிறப்பிலேயே உள்ள நீந்தும் ஆற்றல் இவற்றுக்கும் உள்ளன.

## பாம்பு ஓணான்

பாம்பு போன்ற தோற்றத்தில் இருக்கும் பாம்பு ஓணானுக்கு, முன் பாதங்கள் இல்லை. பின் பாதங்கள் துடுப்புப் போன்றிருக்கும். இவை சிறிய உடல் அளவில் காணப்படும்.

## டெகு ஓணான்கள்

தென் அமெரிக்காவின் மழைக்காடுகளில் வசிக்கும் டெகு ஓணான்கள், பறவைக் குஞ்சுகள், சிறிய பாலூட்டிகள் என்பனவற்றைத் தேடி வேட்டையாடுவதில் ஆர்வம் கொண்டவை. பசி ஏற்பட்டால் தமது இனத்தைச் சேர்ந்த உறவினர்களையே விழுங்கிவிடும் அளவுக்கு அவற்றின் பசி தீவிரமானதாகும். ஓணான்களுக்கே உரிய சொரசொரப்பான செதில் கொண்ட உடல் அமைப்பு, பிளவுபட்ட நாக்கு, பாதங்களில் கூரான நகங்கள், அசைக்கக்கூடிய கண் இமைகள் போன்ற லட்சணங்களை இந்த டெகு ஓணான்களிலும் காணலாம்.



## சுருக்கமான கழுத்துப்பட்டி அணிந்த மிடுக்கானவர்

ஓணான் குடும்பத்தின் மிடுக்கானவராக அவுஸ்திரேலிய ஓணான் வகை கருதப்படுகின்றது. ஆபத்தான எதிரிகளிடமிருந்து தற்காத்துக்கொள்ள இதன் கழுத்தைச் சூழ சுருங்கிய தோல் உள்ளது. எதிரியை அச்சுறுத்தவென, கழுத்துப்பட்டி போன்றிருக்கும் இப்பகுதியை ஊதிப் பெருப்பித்துக் காட்டும். அப்பொழுது அதன் உருவம் பயங்கரமானதாக இருக்கும். அத்துடன் தலையை ஆட்டி வாலையும் சுழற்றும்.



ஓணான் முட்டைகள்

## இகுவானா

சுற்றாடலின் வெப்பநிலையானது, இகுவானாவின் இருப்புக்கு மிகவும் அவசியமாகும். ஏனெனில், இதன் உடல் ஒரு மின்கலம் போன்றதாகும். சுற்றாடலில் வெப்பநிலை இல்லாவிடின் இதன் உடலும் இயக்கமற்றுவிடும்.

இகுவானாவின் வாழ்நாளின் பெரும்பகுதி சூரியக் குளியலிலேயே கழியும். இதனூடாக தனது உடலின் செயற்பாட்டை அதிகரித்துக்கொள்கின்றது. இரவு நேரங்களில் இகுவானாக்களின் உடலின் வெப்பநிலை குறைந்துவிடும். அதன்போது அவை மந்தகதியை அடைந்துவிடும்.

கெலப்பாகொஸ் தீவில் உள்ள இகுவானாக்கள், 35 அடி ஆழம் வரை நீந்துமளவுக்கு அதி திறமை கொண்டிருக்கும். அவை இவ்வாறு ஆழ்ப்பகுதிக்குச் சென்று தமது விருப்பமான உணவான கடற்தாவரங்களையே தேடுகின்றன. நீச்சல் வேலை முடிந்தவுடன் அவை கரைக்கு வந்து இழந்த உடல் வெப்பநிலையை மீட்டுக்கொள்கின்றன.

-பிரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 5 பகுதி -I

பெயர்: ..................................................

★ பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து, கோடிடுக.

01) பத்தினிடத்தில் இலக்கம் ஐந்தாகவுள்ள எண்;

1. 750  2. 085  3. 503

02) [743] பெட்டியினுள் உள்ள எண்ணில் இலக்கம் 4 ஆல் வகை குறிக்கும் பெறுமானம்;

1. 400  2. 40  3. 04

03) 5304 ஐ விரித்து எழுதும் விதம் யாது?

1. 5000+30+00+4  2. 5000+300+0+4  3. 500+30+0+4

04) வெற்றிடத்தில் வரவேண்டிய இலக்கம் எது?

| | | |
|---|---|---|
| □ | 7 | 3 |
| □ | 4 | 2 |
| 9 | 1 | 5 |

1. $\frac{2}{7}$  2. $\frac{3}{6}$  3. $\frac{2}{6}$

05) பின்வரும் தரவுகளின்படி, சரியான விடையைத் தெரிவுசெய்க.

◍ + 0 = 700
◍ - 0 = 500
◍ + ◍ +0 + 0 = ?

கேள்வி அடையாளம் இடப்பட்ட பகுதிக்கான சரியான விடை எது?

1. 1200  2. 1300  3. 1400

06) 7356, 6856, 6356, ----

1. 5856  2. 5854  3. 5850

★ பின்வரும் விளக்கத்தினை விளங்கிக்கொண்டு விடை தருக.

5 △ 4= 5//5

07) கணித முறைகளுக்கு △ அடையாளம் காட்டப்பட்டிருப்பது;

1.கூட்டல்  2. கழித்தல்  3. வகுத்தல்

08) க்ணித முறைகளுக்கு அமைய // அடையாளம் காட்டப்பட்டுள்ள குறி குறிப்பது;

1. கூட்டல்  2. கழித்தல்  3. வகுத்தல்

09) [2][6] → [16]  [6][3] → [18]  [5][4] → [?]

1. 18  2. 16  3. 13

10) ஒரு பெட்டியில் 356 மாம்பழங்கள் உள்ளன. வெறொரு பெட்டியில் முதல் பெட்டியை விட 50 மாம்பழங்கள் கூடுதலாக உள்ளன. எனின், இரண்டாவது பெட்டியிலுள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?

1. 762  2. 712  3. 710

★ அடுத்து வரும் இரு வினாக்களுக்கும் கோடிடப்பட்ட பகுதிக்கான கருத்தை தெரிந்து கோடிடுக.

11) நான் விடியுமுன் எழும்புவேன்.

1. காலை  2. அதிகாலை  3. முன்னிரவு

12) உழவன் ஏர் பூட்டி வயலை உழுதான்.

1. மேழி  2. மாடு  3. மண்வெட்டி

13) துன்பத்திற்கு மேல் துன்பம் வருதல் என்பதை விளக்கும் பழமொழி யாது?

1. கும்பிடப் போன கோயில் இடிந்து விழுந்தது போல்.
2. இரவு விழுந்த குழியில் பகலில் விழுவதில்லை.
3. மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல்.

14) மிகவும் மகிழ்ச்சிக்கு உள்ளாதல்;

1. அரச மாளிகைப் புறா போல.  2. மனதில் பூ பூத்தது போல.
3. விகடகவியின் நகைச்சுவை போல.




★ பின்வரும் தொடருக்குப் பொருத்தமான உவமைத் தொடர்;

15) மிகுந்த சுறுசுறுப்புடையது;

1. கரையானைப்போல  2. எறும்பைப்போல
3. வண்ணத்துப்பூச்சி போல

16) மிகவும் தந்திரமுள்ளது;

1. நரியைப் போல  2. காகம்போல  3. சிங்கம் போல

17) பாடசாலையில் எப்போதும் இருப்பது.

1. மாணவர்கள்  2. ஆசிரியர்கள்  3. கதிரைகள்

18) பத்திரிகையில் அதிகளவில் காணப்படுவது;

1. எழுத்துக்கள்  2. பந்திகள்  3. சொற்கள்

19) கிளி எப்போதும்;

1. பேசும்  2. பறக்கும்  3. பச்சை நிறம்

20) குறி பார்த்து அம்பெய்வதில் கமலன் கெட்டிக்காரனாம். எனினும், இம்முறை போட்டியில் தோல்வி அடையக் காரணம்;

1. அவனுடைய அகங்காரம்
2. போட்டியை போட்டியாகக் கருதாமை
3. போதிய பயிற்சியின்மை

21) யானை ஒரு நடக்கும் மிருகம். அப்படியாயின், ஆயிரங்கால் அட்டை;

1. பறக்கும்  2. ஊரும்  3.பாயும்

22) மோட்டார் வண்டிகளை எதற்காக வைத்திருப்பார்கள்?

1. கௌரவத்திற்காக  2. பிரயாணம் செய்வதற்காக
3. உடற்பயிற்சிக்காக

23) விசர் நாய் கடித்த ஒருவர் செய்யவேண்டியது யாது?

1. வைத்தியரை நாடிச் சென்று ஊசி போடுதல்
2. தைலம் பூசுதல்
3. மந்திரித்து நூல் கட்டுதல்

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

### தரம் - 5 பகுதி -II விடைகள்

(ஜனவரி 15 ஆம் திகதி பிரசுரமானவை)

01) 1. கண்டி
2. தாவரங்கள், செடிகள், கொடிகள், தொங்குபாலம்
3. மகிழ்ச்சி, களிப்பு
4. தினம்/ஞாயிற்றுக்கிழமை
5. புகையிரதம், முச்சக்கரவண்டி
6. ரசித்தோம்
7. தொங்கு

02) 1. விமான நிலையம்
2. தோழி
3. கடல்மார்க்கம்

03) 1. மாணவர்களும்
2. மணல்
3. படித்தீர்கள்

04) 1. இலங்கை போக்குவரத்து சபை
2. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

05) 1. இது எனது அம்மா/ இவர் என்னுடைய அம்மா
2. மன்னிக்கவும், நான் உள்ளே வரலாமா?

06) 1. அப்பா இது எனது புத்தகம்.
2. அம்மா எனக்குப் பசிக்கிறது.

07) 1. 24cm$^2$  2. 28cm

08) 1. 120 ஏக்கர்  2. 60 ஏக்கர்
3. 240 ஏக்கர்  4. 1/4

09) 1. 7cm

10)

| | |
|---|---|
| 01. 1 | 06. 3 |
| 02. 3 | 07. 1 |
| 03. 3 | 08. 2 |
| 04. 3 | 09. 2 |
| 05. 1 | 10. 2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


குதிரைகளும் எருதுகளும்


புள்ளிகள் மற்றும் கோடுகளினாலான குறிப்பொன்று


த பெனல் ஒஃப் ஹோசஸ்

# வரலாற்றுக்கு முற்பட்ட பெலியோலித்திக் காலம்

*சுமார் 4-4 1/2 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் தோன்றிய முதல் மானிட இனத்தினை 'ஹோமோ ஹெபிலிஸ்' என்று குறிப்பிடுவர். இதன் அடுத்த சந்ததி 'ஹோமோ இரெக்டஸ்' என்று அழைக்கப்பட்டது. இவ்வாறே, சிந்திக்கக்கூடிய மனித சந்ததி 'ஹோமோ சேப்பியன்ஸ்' என்று அழைக்கப்பட்டது. இந்த மனித வரலாற்றில் எழுத்துக்கலை ஆரம்பிப்பதற்கு முன்னரான காலப் பகுதி 'வரலாற்றுக்கு முற்பட்ட காலம்' எனப்படுகின்றது, இந்தக் காலப்பகுதியானது, மானிடவியல் அறிஞர்களினால் இரு விரிவான காலப்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றை 'பெலியோலித்திக் காலப்பகுதி' (ஆரம்ப கற்காலம்) என்றும் 'நியோலித்திக் காலப்பகுதி' (நவீன கற்காலம்) என்றும் அழைப்பர். இந்த இரண்டு காலப்பகுதிகளுக்கும் இடைப்பட்ட காலம் 'மெசோலித்திக் காலப்பகுதி' என்று அழைக்கப்படுகின்றது.*

## பெலியோலித்திக் காலம்


'பெலியோலித்திக் காலம் ஆனது, 'ஆரம்ப கற்காலம்' என்றும் அழைக்கப்படுகின்றது. இந்தக் காலப்பகுதியை மேலும் மூன்று உப பிரிவுகளாகப் பிரிப்பர். கீழ் பெலியோலித்திக் காலம், மத்திய பெலியோலித்திக் காலம், மேல் பெலியோலித்திக் காலம் என அந்தக் காலங்கள் அமைந்திருந்தன. மனித பரிணாம வளர்ச்சியின் ஆரம்ப காலப்பகுதியாக பெலியோலித்திக் யுகத்தைக் கூற முடியும். இந்தக் காலப் பகுதியில் வானர மனிதன் தொடக்கம் சிந்திக்கும் மனிதனான ஹோமோ சேப்பியன்ஸ் வரை மனிதன் வளர்ச்சி பெற்றான். மனித பரிணாம வளர்ச்சிப் பாதையில் இக்காலப்பகுதி நீண்டதொரு காலப்பகுதியாகக் கருதப்படுகின்றது. இந்த காலப்பகுதியில் உணவுக்காக அவர்கள் வேட்டையாடினர். அதற்காக ஈட்டிகள், கூர் ஆயுதங்கள், கற்களிலான ஆயுதங்கள் என்பன பயன்படுத்தப்பட்டன.

## கீழ் பெலியோலித்திக் காலம்

வரலாற்றுக்கு முற்பட்ட யுகத்தில் வாழ்ந்த மானிட சமூகம் பாவித்த முதலாவது ஆயுதம் கற்களினாலான கத்தி ஆகும். இது தன்சானியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒஸ்ட்ரலோபித்தகஸ் மானிடத்தின் படைப்பாக இது கருதப்படுகின்றது. கீழ் பெலியோலித்திக் காலப்பகுதியில் ஹோமோ இரெக்டஸ் மனிதர்களே கற்களிலான ஆயுதங்களை முதலில் பயன்படுத்தியுள்ளனர். அக்காலத்தில் அவர்களின் பிரதான ஆயுதமாக கைக்கோடாரிகளே பயன்படுத்தப்பட்டுள்ளன.

## மத்திய பெலியோலித்திக் காலம்

10,000 முதல் 40,000 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த நியண்டர்தால் மனிதனின் காலப்பகுதி 'மத்திய பெலியோலித்திக் காலப்பகுதி' ஆகும். இவர்கள் வாழ்ந்ததாகக் கருதப்படும் குகைகளில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சிகளின்போது, இவர்கள் நெருப்பினைப் பயன்படுத்தியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இந்த மனிதர்கள் பாலூட்டி விலங்குகளை வேட்டையாடியும் உள்ளனர்.


மெமத் வேட்டை

ஐரோப்பா, வட ஆபிரிக்கா, பலஸ்தீன், சைபீரியா ஆகிய நாடுகளில் உள்ள பகுதிகளில் நியண்டர்தால் மனிதர்கள் வசித்துள்ளனர் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த காலப்பகுதியில் பெரும்பாலும் எலும்புகளினாலான ஆயுதங்களை இவர்கள் உருவாக்கியுள்ளனர். அத்துடன், அவர்கள் இறந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்துள்ளனர். அடக்கம் செய்வதற்கு முன்னர் சடலத்தில் பல்வேறு நிறங்களைப் பூசியுள்ளனர்.

## மேல் பெலியோலித்திக் காலம்

இந்தக் காலப்பகுதியில் நியண்டர்தால் மனிதனுக்குப் பதிலாக, ஹோமோ சேப்பியன்ஸ், க்ரோ-மெக்னன் மற்றும் க்ரிமல்டி ஆகிய மானிட வர்க்கங்களைக் காண முடிந்தது. இந்தக் காலப்பகுதியில் வேட்டையாடுதல் பொதுவாக இடம் பெற்றது. அத்துடன், பனிக் காலப் பகுதியில் வாழ்ந்த பாரியளவிலான மெமத் விலங்குகளை இவர்கள் கூட்டமாக வேட்டையாடினர். மனிதனால் உருவாக்கப்பட்ட முதலாவது இருப்பிடமும் இக்காலப்பகுதியில்தான் உருவாக்கப்பட்டது. இந்த காலப் பகுதியில் வாழ்ந்தவர்கள் வேட்டையாடிய விலங்குகளின் தோல்களால் உடைகளைத் தயாரித்து அணிந்து கொள்ளும் அளவுக்கு நாகரிகம் கொண்டவர்களாக விளங்கினர். அவர்கள் தந்தங்கள், கொம்புகள் என்பனவற்றைப் பயன்படுத்தி தமக்கான அணிகலன்களை உருவாக்கிக் கொண்டனர். சிற்பங்கள் மற்றும் குகை ஓவியங்கள் என்பனவற்றையும் இங்கு காண முடியும். முதலாவது படகின் உருவாக்கமும் இக்காலப்பகுதியில்தான் நிகழ்ந்தது.

## பெலியோலித்திக் கால கலைத்திறமைகள்

பெலியோலித்திக் கால மானிட சமுதாயம் தமது அன்றாடத் தேவைகளுக்கான ஆயுதங்களைத் தாமே தயாரித்துக்கொண்டதைப் போன்றே, தாம் வாழ்ந்த குகைகளில் சித்திரங்களை வரையவும் பலதரப்பட்ட உருவங்களைச் செதுக்கவும் ஆரம்பித்தனர். அந்தவகையில், 'குதிரையின் தலைகள்' எனும் உலகின் முதலாவது குகைச் சித்திரம் வட ஸ்பெய்னின் அல்டாமிரா குகையில் கண்டுபிடிக்கப்பட்டது. த பெனல் ஒஃப் ஹோசஸ் என்ற சித்திரம், தெற்கு பிரான்ஸில் அமைந்துள்ள ச்சாவுவெட் குகையிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இந்த குகைச் சித்திரமானது, 31 ஆயிரம் முதல் 34 ஆயிரம் ஆண்டுகள் எனும் வரலாறு கொண்டதாகக் கருதப்படுகின்றது.

இவை தவிர,மனித வரலாற்றின் மைல்கல்லாகக் கருதப்படும் குறிப்பு ஒன்றும் ச்சாவுவெட் குகையில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கோடுகள், புள்ளிகளைப் பயன்படுத்தி வரையப்பட்டுள்ள இக்குறிப்பானது, எழுத்துக்கலையின் ஆரம்பமாகவும் கருதப்படுகின்றது. ச்சாவுவெட் உட்பட பிரான்ஸில் உள்ள ஏராளமான குகைகளில் இருந்து இவ்வாறான சமிக்ஞைக் குறிப்புக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மலையக ராச்சியத்திற்கென ஓர் அரசியலமைப்பு

ஆங்கிலேயர் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னனை அரச பதவியில் இருந்து நீக்கவும் அவரது அரச வம்சத்தை முடிவுக் குக் கொண்டுவரவும் இங்கிலாந் துப் பேரரசனை கண்டி மன்ன னாக ஏற்றுக்கொள்ளவும் தீர்மா னித்தனர். ஆள்பதியைச் சந்திப்ப தற்காக பிரதானிகள் அழைக்கப் பட்டு டொய்லி அவர்களால் உருவாக்கப்பட்ட அரசியலமைப் புப் பத்திரம் அவர்கள் முன்னிலை யில் வாசிக்கப்பட்டது.

மலையக ராச்சியத்தின் எதிர்கால அரசியலமைப்புக் குறித்த கொள்கைப் பிரகடனமும் டொய் லியால் எழுதப் பட்ட ஒப்பந்தப் பத்திரமும் அத்தோடு இணைக்கப்பட்டிருந்தது. முதலாம் மற்றும் இரண்டாம் பந்திகளின்படி ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்ன ருக்கு இனிமேல் கண்டி இராச்சிய அரச பதவிக்கு எவ்வித உரிமையு மில்லை என்றும் அத்தோடு அரச பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டு அவரின் வம்சத்திற்கு உரித்தான எவரும் அரச அதிகாரங்களை அனுபவிக்கும் உரிமைகளை இழந்தவர்களாகக் கருதப்படுவர் என்றும் இருந்தது.

மூன்றாவது பந்தியில் மன்னரின் உறவினர்களில் ஆண்கள் அனைவரும் நாட்டிலிருந்து வெளியேற்றப்படு வர் என குறிப்பிடப் பட்டிருந்தது.

நான்காவது பந்தியில் பிரதானி கள், திசாவைமார்கள், அதிகாரம் மற்றும் மொஹொட்டாலமார்கள், கோரளைகள், விதானைமார்கள், கிராமத் தலைவர்கள் மற்றும் ஏனைய பிரதானிகள் தாம் தற்போது வகிக்கும் உத்தியோகபூர்வ பதவிகள் அதற்கான உரிமைகள் அவற்றின் அதிகாரங்கள் அனைத்தையும் தொடர்ந்து வகிக்க முடியும். எனினும், முழு ராச்சியமும் ஆங்கிலப் பேரரசனிடம் கையளிக்கப்படுகின்றது என அந்த ஒப்பந்தத்தில் மேலும் எழுதப்பட் டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு

மருதமுனை 'எம்.எஸ்.சி' பாலர் பாடசாலை மாணவர்களின் வருடாந்த பட்டமளிப்பு விழாவும் கலை கலாசார நிகழ்வும் பாடசாலை தலைமை ஆசிரியை இஸட்.ஏ.நஸ்ரீன் ஜஹான் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றன. இதன்போது, பிரதம அதிதியாக முன்னாள் கல்முனை உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.இப்றாஹீமும் கல்முனை பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஓ.கே.சரிபா சாஜஹான், சமூகப் பணியாளர் எஸ்.எம்.ஜாபீர்ஜி மற்றும் ஆசிரியை எச்.எம்.சித்தி பரீனா ஆகியோரும் மற்றும் சிறார்கள் பலரும் கலந்துகொண்டுள்ளதையே படத்தில் காண்கிறீர்கள்.

*(படமும் தகவலும்: றாசீக் நபாயிஸ்)*



தலவாக்கலையைச் சேர்ந்த சுந்தரராஜ்-தனலெட்சுமி தம்பதியரின் செல்வப் புதல்வன் சபிஷன், தனது பதின்மூன்றாவது பிறந்ததினத்தை 15.01.2014 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவனின் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



கல்முனை-02 ஐச் சேர்ந்த தயாகரன்-செவ்வந்தி தம்பதியரின் செல்வப் புதல்வி கெலக்ஷி, தனது ஏழாவது பிறந்தநாளை 19.01.2014 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இருதய ஆண்டவர் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



தெஹிதெனிய மடிகே-ஹதரலியத்தையைச் சேர்ந்த சபீல்ட்-சவுருவான் தம்பதியரின் செல்வப் புதல்வன் மொஹமட் சஜீர், தனது மூன்றாவது பிறந்தநாளை 14.01.2014 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றனர்.

## கைவண்ணங்கள்



ப.சாருஜான்,
சென். மேரிஸ் ம.கல்.,
பொகவந்தலாவ.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



பு.பிரகாஷன்,
கொக்குவில் இந்துக் கல்.,
யாழ்ப்பாணம்.



சு.நிஷாலினி,
தி/பராசக்தி வித்தியாலயம்,
திருகோணமலை.



மா.ஸறுத் பாத்திமா,
அல்-ஹம்றா வித்., மருதமுனை.



க.கலைக்ஷன்,
புதுக்குடியிருப்பு ம. கல்.,
புதுக்குடியிருப்பு.

# ஈரநில குறுக்கெழுத்துப் போட்டி இறுதி வெற்றியாளர்கள் தெரிவு...!

பெப்ரவரி 02 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள உலக ஈரநில தினத்தையொட்டி, இலங்கை வனஜீவிகள் திணைக்களம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால், 'விஜய்' பத்திரிகையின் ஊடக அனுசரணையில் நடாத்தப்பட்ட, ஈரநில குறுக்கெழுத்துப் போட்டியில் பங்குபற்றியோரில் இருந்து, இறுதிப் போட்டியில் வெற்றியீட்டுவோரை தெரிவுசெய்யும் நிகழ்வு மத்திய சுற்றாடல் அதிகாரசபை கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது 1 ஆம், 2 ஆம், 3 ஆம் பரிசுக்குரியோரும் ஆறுதல் பரிசுபெறும் 25 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:

**ரூபா 10,000 பணப்பரிசும் சுற்றுலா பங்களா செல்பவரும்**
**1 ஆம் இடம்:**
ஏ.ஆர்.எம்.ரஸ்மி,
20, பேரகஸ்வத்த, வெலிமடை.
*(இவர் ரூபா 10,000 பணப்பரிசைப் பெறுவதுடன், தனது பெற்றோருடன் தேசிய வனவிலங்கியல் சுற்றுலா பங்களாவில் இரண்டு நாட்களைக் கழிப்பதற்கான வாய்ப்பைப் பெறுகின்றார்.)*

**2 ஆம் இடம்:**
(ரூபா 7,500 பணப்பரிசு)
கே.அவோன் புளோரியன்,
29/A பற்றிமாகிரி வீதி,
மட்டக்களப்பு.

**3 ஆம் இடம்:**
(ரூபா 5,000 பணப்பரிசு)
ஈ.கரன்,
119, 5 ஆம் குறுக்குத் தெரு,
ரமேஸ்புரம்,
செங்கலடி.

## ஆறுதல் பரிசுகளைப் பெறுவோர்: (தலா ரூபா 2,500)

- பே.பவான். பே.பவித், 209/5, வைத்தியா வீதி, பாண்டிருப்பு-01.
- பஸீஹா பர்வின் பாஹீம், 8/2, பிஹில்லதெனிய, மடவளை பஸார். 20260.
- ஏ.ஆர்.எஃப்.அமானா, 77/1, மாவதுபொல வீதி, அலவத்துகொட.
- ஏ.எஸ்.எஃப்.றிஸ்லா, 287/A, நவசேனபுர, பொலன்னறுவை.
- ஏ.எம்.நிப்ராஸ், கொழும்பு வீதி,ஹிதாயத் நகர், மதுரங்குளி, புத்தளம்.
- எம்.என்.எஃப்.ஹப்ஸா, 208/5, கடுகஹவத்த, தெவனகல.
- கலைதாசன் சரண், மலையான் தோட்டம், இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.
- நி.ஹாதிம் அகமட், 62, அல்-அக்ஸா வீதி, கிண்ணியா -02.
- பாத்திமா நிப்லா, 33/3, பீரிஹல,படகொல்லாதெனிய.



- கி.யனுசன், தென்னியன் குளம்,துணுக்காய்.
- ஆர்.துஷ்யந்தி, 42/10, கொழுவாவில பாதை, பாமன் தோட்டம், இரத்தினபுரி.
- எம்.எம்.மொஹமட், 45/6, கல்பொக்க வீதி, வெலிகம.
- யோ.அபிராமன், கும்பப்பிள்ளை, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
- இராசலிங்கம் ராகீதன், கோட்டைகட்டிய குளம், அக்கராயன், முல்லைத்தீவு.
- பாத்திமா பஸாஹா பைஸர், 61/7, பன்தியாவத்த, கங்கானன்கொட, பேருவளை.
- கோ.வினோஜ்குமார், 132/2A, கோரக்கர் வீதி, சம்மாந்துறை, அம்பாறை.
- எம்.எஃப்.எஃப்.சாஜிதா, 104, உப்புக்குளம், மன்னார்.
- எம்.என்.ஷாகிரா, 15/5L, சுற்றுவட்ட வீதி, பதுளுபிட்டிய, பதுளை.
- ம.புவிதா, 95, அம்பலபெருமாள்குளம், அக்கராயன்.
- செல்வேந்திரன் சரவணன், மாதா கோவிலடி, தலைமன்னார்.
- எம்.ஜே.எஃப்.ரஸானா, 130/8, தெல்கஹாகொட, ஹிங்குல.
- பி.பானுமதி, கள்ளப்பாடு, முல்லைத்தீவு.
- செ.யேதிகா, தென்னியன்குளம், துணுக்காய்.
- பாத்திமா ஹில்மா முன்ஸித், 240/4, மெகொட, கொலன்னாவ.
- ரொ.பிரான்ஸிஸ் குரூஸ், தோமஸ்புரி, வங்காளை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*'கடற்கொள்ளையர்கள்' (Pirates) பற்றிய தகவல்கள், கடற்பயணங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் வரலாற்றில் பதிவாகியுள்ளன. அன்று முதல் இன்று வரை கடல் போக்குவரத்திற்குக் கடற்கொள்ளையர்கள் சவாலாகவே உள்ளனர். கடற்கொள்ளையர்களிடமுள்ள கப்பல்கள் மிகவும் வேகமாகச் செல்லக்கூடியவை. அவற்றைப் பின்தொடர்ந்து சென்று தாக்குவது மிகவும் ஆபத்தான செயலாகவே இருந்தது. பெரும்பாலும் பொருட்களைக் கொண்டு செல்லும் கப்பல்களே, கடற்கொள்ளையர்களின் தாக்குதலுக்குட்பட்டன. அந்தக் கப்பல்களிலிருந்த பெறுமதியான பொருட்கள் அவர்களால் சூறையாடப் பட்டன. சில கடற்கொள்ளையர்கள் தாம் தாக்கும் அனைத்துக் கப்பல்களையும் மூழ்கடித்தனர். அக்கப்பல்களிலிருந்த அனைத்துக் கப்பல் பணியாளர்களையும் ஈவிரக்கமின்றி கொலை செய்தனர். உயிருடன் அவர்களை விடுவித்தால் அவர்கள் தம்மை அடையாளம் காட்டி விடுவார்கள் என்ற அச்சத்தினாலேயே இவ்வாறு செய்தனர்.*

*உலகின் பிரசித்தி பெற்ற கடற்கொள்ளையர்கள் கப்பல்களைத் தாக்கிய சம்பவம் இற்றைக்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னரே இடம்பெற்றது. கரீபியன் கடல் வலயத்திலேயே இது நடைபெற்றதால், அப்பகுதிகளில் காணப்பட்ட கொள்ளையர்கள் 'கரீபியன் கடற்கொள்ளையர்கள்' என அழைக் கப்பட்டனர். 'பைரேட்ஸ் ஒஃப் த கரீபியன்' என்ற திரைப்படத் தொடரின் கருப் பொருளாக அமைந்ததும் இந்தக் கடற்கொள்ளையர்களே. இன்றைய திரைப் படக்காரர்கள் போன்றே முன்னைய இலக்கிய எழுத்தாளர்களும் கடற்கொள் ளையர்களையும் அவர்களது செயல்களையும் மையமாகக் கொண்டு வீரதீரக் கதைகளை உருவாக்கினர். லோன் ஜோன் சில்வர் என்ற கடற்கொள்ளை யனைப் பற்றி ரொபட் லுயி ஸ்டிவன்சன் எழுதிய Treasure Island என்ற புதையல் தீவு பற்றிய நூல் சிறந்த இலக்கிய நூலாகத் திகழ்ந்தது. எனினும், கடற்கொள்ளையர்கள் அக்கதையில் கூறப்படுவதைப் போன்றவர்கள் அல்லர். அவர்கள் உண்மையிலேயே கொடியவர்கள்; ஈவிரக்கமற்ற பாதகர்கள். இவ்வாறான கடற்கொள்ளையர்களால் வரலாறுகூட மாற்றமடைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.*




## மத்தியதரைக் கடல்

மத்தியதரைக் கடல் வலய கடற்கொள்ளையர்கள் பற்றிய நீண்டகால வரலாறு காணப்படுகிறது. முதன்முதலில் கடற்கொள்ளையர்கள் இந்த வலயத்திலேயே இருந்தனர். இவர்கள் கிரேக்க-ரோமானிய செல்வந்தர் களின் கப்பல்களையும் வர்த்தகக் கப்பல்களையும் வழிமறித்துத் தாக்கிச் சூறையாடினர். இது 2500 ஆண்டுகளுக்கும் முன்னரான காலப்பகுதிகளில் நடைபெற்றது. 16 ஆம் நூற்றாண்டில் மோல்டேஸ் எனப்பட்ட கிறிஸ்தவக் கடல் கொள்ளையர்களுக்கும் பாபரி எனப்பட்ட வட ஆபிரிக்க முஸ்லிம் இனக் கடற்கொள்ளையர்களுக்குமிடையே மத்தியதரைக் கடலில் அடிக்கடி கடும் மோதல்களும் ஏற்பட்டன.

## ஜொலி ரொஜர்

பொருட்கள் சூறையாடப்படும் கப்பல்களில் உள்ளோரை அச்சுறுத்தி, அங்குள்ளவற்றை தம்வசப்படுத்திக்கொள்ளும் பொருட்டும் தம்மை அடை யாளப்படுத்தும் பொருட்டும் கடற்கொள்ளையர்கள் 18 ஆம் நூற்றாண்டு முதல் தமது கப்பல்களில் மரணத்தை அடையாளப்படுத்தும் கொடிகளைப் பறக்க விட்டனர். மண்டையோட்டுடன் இரண்டு எலும்புத்துண்டுகளைக் குறுக்கே கொண்டமைந்த கொடிகளாகவே அவை பெரும்பாலும் வடிவமைக்கப்பட்டிருந்தன. அது 'ஜொலி ரொஜர்' எனப்பட்டது.

எனினும், சில கடற்கொள்ளையர்கள் தமது கப்பல்களில் தாம் விரும்பும் அடையாளங்களுடன்கூடிய கொடிகளைப் பயன்படுத்தினர். எனினும், 'ஜொலி ரொஜர்' அடையாளத்தை ஆங்கில இனத்தைச் சேர்ந்த கடற்கொள்ளை மாலுமியான, 1720 ஆம் ஆண்டு மரணமடைந்த ஜெக் ரெக்கம் என்பவனே பயன்படுத்தினான். இவ்வாறே, நாம் அனைவரும் நன்கறிந்த பெல்ஜிய எழுத்தாளர் ஹர்ஜ்ஜின் 'டின்டின் என்ட் த சீக்ரட் ஒஃப் த யுனிகோன்', 'ரெட் ரெகம்ஸ் ட்ரஷர்' எனும் நூல்களில், ரெட் ரெகம்ஸ் எனும் கடற்கொள்ளைக்காரன் பற்றியும் அவனது புதையல் பற்றியும் கூறப்படுகிறது.

## உணவுக் கொள்ளை

கடற்கொள்ளையர்கள் கப்பல்களைத் தாக்கி, கப்பல்களையும் கப்பல் களில் உள்ள பெறுமதியான பொருட்களையும் சூறையாடும் சம்பவங்கள் பெரும்பாலும் இந்து சமுத்திரப்பகுதிகளிலேயே நிகழ்ந்தன. இப்பகுதி களின் வழியாகவே சீனாவுக்கும் இந்தியாவுக்கும் வர்த்தகக் கப்பல்கள் பயணித்தன. இக்காலகட்டங்களில் தங்கம், வெள்ளி, முத்து, வைரக்கற்கள் என்பனவற்றைக் கொள்ளையடிப்பதற்குப் பதிலாக, சில கடற்கொள்ளையர்கள் உணவு வகைகளையே அதிகமாகக் கொள்ளைய டித்தனர். தமது கப்பல்களில் அவர்கள் பட்டினியால் வாடியமையே அதற்கான காரணமாக இருந்தது. அவர்களால் எந்தவொரு நாட்டிற்குள்ளும் புகமுடியாத நிலை காணப்பட்டதால், உணவு கிடைக்காமல் பசியால் மரணமடைந்தவர்களும் உள்ளனர். இதனாலேயே சிலர் பெறுமதியான பொருட்கள், உடைகள் என்பனவற்றைவிட உணவுகளை அதிகளவில் கொள்ளையடிக்க முனைந்தனர்.

## கடற்கொள்ளையர்களின் வேட்டை நிலங்கள்

பெறுமதியான பொருட்களை ஏற்றிச்செல்லும் கப்பல்கள் பயணிக்கும் கடல் வலயங்களே கடற்கொள்ளையர்களின் வேட்டை நிலங்களாகும். இப்பகுதிகளில் சஞ்சரித்த கடற்கொள்ளையர்கள், வர்த்தகக் கப்பல்களை யும் செல்வந்தர்கள் சென்ற கப்பல்களையும் கடுமையாகத் தாக்கினர்.



பைரேட்ஸ் ஒஃப் த கரீபியன் திரைப்படக் காட்சியொன்று.

இவ்வாறே கரீபியன் கடல் வலயத்தில் இருந்
தேசப்படம், திசையறிகருவி என்பனவற்றை
போக்குவரத்துப் பாதைகளை நன்கு அறிந்து
கடலில் அமைந்திருந்த சிறு தீவுகளில் ஒளிந்
வரும் வர்த்தகக் கப்பல்களை பின்தொடர்ந்
அந்தவகையில், கடற்கொள்ளையர்களின்
கடல் வலயம், இந்து சமுத்திர வலயம், மத்தி
சீனக் கடல் வலயம் என்பன அமைந்திருந்த

## நவீன கடற்கொள்

முற்காலத்தில் மட்டுமன்றி, தற்போதும் கட
னர். அவர்களில் பிரசித்தி பெற்ற சோமாலிய



## கடற்ப
## கப்பல்



ஆபிரிக்காவை அண்மித்த இந்திய கடற்பகு
அவர்களிடம் நவீன ஆயுதங்கள், ரேடார்,
படகுகள் என்பன உள்ளன. கொள்ளையடி
கன்டேனர் கப்பல்களைக் கைப்பற்றி, அவ
கைதிகளாகப் பிடித்துக் கப்பம் கேட்கின்றன
சிறைப்பிடிக்கப்பட்டோரை அவர்கள் சுட்டு
சோமாலியக் கடற்கொள்ளையர்களால் ஏற்ப
எதிராக அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகள் வி
சாதனங்களை பிரயாணக் கப்பல்களின் பாது
கின்றனர். இதனால், சோமாலியக் கடற்கொ
மோதல்களும் ஏற்படுவதுண்டு. சோமாலிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்தில் இருந்த கடற்கொள்ளையர்கள் ன்பனவற்றைக் கொண்டு கப்பற் நன்கு அறிந்து வைத்திருந்தனர். இதனால், களில் ஒளிந்திருந்து, அவற்றுக்கருகில் பின்தொடர்ந்து சென்று சூறையாடினர். ளயர்களின் வேட்டை நிலங்களாக கரீபியன் வலயம், மத்தியதரைக் கடல் வலயம், தென் அமைந்திருந்தன.

### ற்கொள்ளையர்கள்

ற்போதும் கடற்கொள்ளையர்கள் உள்ள ற சோமாலியக் கடற்கொள்ளையர்கள், போன்று தென் சீனக் கடலிலும் தற்போது கடற்கொள்ளையர்கள் இருக்கின்றனர்.

### கடற்கொள்ளைக்காரி-ஆன் பொனி

அயர்லாந்தைச் சேர்ந்த கடற்கொள்ளைக்காரியான ஆன் பொனி, 18 ஆம் நூற்றாண்டில் கரீபியன் கடலில் பயணித்த கப்பல்களைத் தாக்கிக் கொள்ளையடித்தாள். அவளது துணிச்சலும் திறமையான செயற்பாடும் அவளைப் பிரசித்தியடையச் செய்தது. இவள் 1720 ஆம் ஆண்டு உயிரிழந்தாள்.


### அனுமதி பெற்ற கடற்கொள்ளையர்கள்

1500-1700 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பல நாடுகள் (பிரித்தானியா போன்ற நாடுகள்) கடற்கொள்ளையர்களைப் பதிவுசெய்துகொண்டன. கடலில் பயணிக்கும் கப்பல்களைப் பாதுகாக்கவும் அக்கப்பல்களைத் தாக்கவரும் ஏனைய எதிராளி கடற்கொள்ளையர்களைத் தாக்கவும் இவர்களுக்கு சட்ட ரீதியிலான அங்கீகாரம் வழங்கப்பட்டது. இவர்கள் 'ப்ரய்வெடியர்ஸ்' எனப்பட்டனர். ஆங்கிலேயரான பிரான்சிஸ் ட்ரேக் (1540-1596 வரை), இத்தகையவர்களில் ஒருவராவார். அவர் ஸ்பாணியக் கப்பல்களைத் தாக்கி, ஆங்கிலக் கப்பல்களைப் பாதுகாத்ததால், தேசிய வீரரானார். பிரான்சிஸ் ட்ரேக்கிடம் ஒரு மேளம் இருந்தது. ஆபத்து அண்மிக்கும்போது அவர் இந்த மேளத்தை அடிப்பதை வழமையாகக் கொண்டிருந்தார். பிரான்சிஸ் ட்ரேக்கின் மரணத்தின் பின்னரும் ஆங்கிலேயர்கள் ஆபத்தை அறிவிக்கும் சமிக்ஞையாக இதனைப் பயன்படுத்தினர்.





கடற்கொள்ளையர்களின் கப்பலொன்றின் உடைந்த பாகங்கள் மீட்கப்படும்போது...





# பயணங்களின்போது ல்களை சூறையாடும்
# கடற்கொள்ளையர்கள்





கடற்கொள்ளையர்களை கருப்பொருளாகக் கொண்டு வெளியான இலக்கியங்கள் சில...

திய கடற்பகுதிகளில் சஞ்சரிக்கின்றனர். கள், ரேடார், வேகமாகச் செல்லக்கூடிய சிறிய கொள்ளையடிப்பது மட்டுமன்றி, பாரிய ப்பற்றி, அவற்றின் மாலுமிகளை பணயக் கேட்கின்றனர். கப்பம் கிடைக்காவிடின், அவர்கள் சுட்டுக் கொன்றுவிடுகின்றனர். யர்களால் ஏற்படுகின்ற அச்சுறுத்தல்களுக்கு ய நாடுகள் விசேட கப்பல் போக்குவரத்து ல்களின் பாதுகாப்பிற்காகப் பயன்படுத்து யக் கடற்கொள்ளையர்களுடன் ஆயுத ). சோமாலியக் கடற்கொள்ளையர்களைப்

-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகை வெற்றிகொள்வதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளில் எழுத்துத்துறை சார்ந்த முயற்சிகளும் அடங்கும். தமது சொல்லால், செயலால் உலகை மாற்றியவர்களைப் போன்றே, தமது எழுத்தாற்றலால் உலகை மாற்றியவர்களும் இவ்வுலகில் இருந்துள்ளனர். இத்தகையோரின் எழுத்தாற்றலானது புத்தகங்கள், சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் எனப் பல வடிவங்களில் வெளிவந்தன. அவற்றில் சில நூலுருப் பெற்றன. அவ்வாறு புத்தகங்களை எழுதிப் பெயர் பதித்தவர்கள் பற்றி இங்கு நோக்குவோம்.

# புத்தகங்கள் எழுதிப் பெயர் பதித்தவர்கள்...

## மெக்ஸிம் கோர்கி



ரஷ்யாவில் பிறந்த கோர்கி, எழுத்தாற்றலை மட்டும் கொண்டவரல்லர். அவர் ஒரு விமர்சகரும் சிறந்த பேச்சாளரும் ஆவார். அது மட்டுமன்றி, அவர் ஒரு புரட்சியாளரும் ஆவார். 1868 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி கோர்கி ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தார்.இவரது தந்தை இவருக்கு அலெக்சி மெக்ஸிமோவிச் பெஷ்கோவ் எனப் பெயர் வைத்தார். 'மெக்ஸிம் கோர்கி' எனப் பிற்காலத்திலேயே இவர் அழைக்கப்பட்டார். கோர்கி சிறுவனாக இருக்கும்பொழுதே, அவரது பெற்றோர் இறந்துவிட்டனர். எனவே, தாத்தாவும் பாட்டியும் இவரது பாதுகாவலராயினர்.

கோர்கியின் இளமைக் காலம் துன்பம் நிறைந்ததாக இருந்ததால், அவரால் கல்வி கற்க முடியவில்லை. அவரது ஏழ்மை அதற்குத் தடையாகியது. எனவே, தனது நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள அவர் பல வேலைகளில் ஈடுபடவேண்டிய நிலை ஏற்பட்டது. கடினமான வேலைகளைப் பல மணித்தியாலங்கள் செய்து களைப்புற்றபொழுதிலும் வாசிக்கும் பழக்கத்தை அவர் கைவிடவில்லை. நித்திரைக்குச் செல்லும் நேரத்திலும் கோர்கி எதையாவது வாசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இந்நிலையில், லெனினின் துணையுடன் பத்திரிகை நிறுவனமொன்றில் கோர்கிக்கு வேலை கிடைத்தது. இதனை அடுத்து அவர் ஒரு சிறுகதையை எழுதினார். 'மெக்ஸிம் கோர்கி' என்ற புனைப்பெயரிலேயே அந்த சிறுகதையை அவர் எழுதி வெளியிட்டார். அன்று தொடக்கம் அவர் அப்பெயராலேயே அழைக்கப்படலானார்.

1905 ஆம் ஆண்டு ரஷ்யாவில் ஏற்பட்ட கலவரத்தின் பின்னர் கோர்கி சிறைதண்டனை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அரசியல் கைதியாக இருக்கும்போதும் அவர் எழுத்துப் பணியில் ஈடுபட்டார். உலகப் புகழ்பெற்ற 'தாய்' என்ற நாவலை அவர் சிறையில் இருந்தே எழுதினார். இவரால் மேலும் பல பணிகள் எழுத்துலகிற்கு செய்யப்பட்டுள்ளன. சிறையில் இருக்கும்போது காசநோயால் பீடிக்கப்பட்ட இவர், 1936 ஜூன் மாதம் 18 ஆம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார்.




## கீ த மோபசான்



கீ த மோபசான், 1850 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி பிரான்ஸில் பிறந்தார். இவர் சிறுவனாக இருந்தபோது, இவரது தந்தை குடும்பத்தை விட்டுப் பிரிந்து சென்றதால், தாயாரே குடும்பத்தின் அனைத்து வேலைகளையும் கவனிக்க வேண்டியவர் ஆனார். கீ த மோபசான் சிறு வயதில் ஆலயக் குருவிடம் லத்தீன் மொழி கற்றார். பின்னர் கத்தோலிக்க பாடசாலை ஒன்றில் கல்வி கற்றார். கற்றலில் திறமையான இவர், பின்னர் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி பயின்றார். சட்டக் கல்வி பயின்ற இவருக்கு, பிரான்ஸிய-ஜேர்மனிய யுத்தம் காரணமாக அதனைத் தொடர முடியாமல் போயிற்று. யுத்தப்பணியில் ஈடுபட்ட அவர், பின்னர் அதிலிருந்து விலகி கடற்றொழில் அமைச்சில் லிகிதராகப் பணி புரிந்தார். அவ்வேளையில் கிடைத்த ஓய்வு நேரங்களை எழுத்துப் பணிக்காகச் செலவிட்டார்.

தான் எழுதிய அனைத்தையும் சிரேஷ்ட எழுத்தாளராக மதிக்கப்பட்ட குஸ்டாவ் ஃப்ளோபர் என்பவரிடம் காட்டி, தவறுகளைத் திருத்தினார். அதனை மிக உன்னிப்பாகவும் அவதானித்தார். மோபசானின் முதலாவது ஆக்கம், Boule de Suit (எண்ணெய்ப் போத்தல்) என்ற பெயரில் வெளியானது. அந்தக் கதை அவரை ஒரு சிறந்த கதாசிரியராக உலகிற்கு அறிமுகப் படுத்தியது.அவரது படைப்பு ஆவலைத் தூண்டுவதாகவும்நடுத்தர வகுப்பினரின் வாழ்க்கையை சிறப்பாக சித்தரிப்பதாகவும் இருந்தது.

பிரான்ஸிய சிறுகதை மரபினை உலகிற்கு அறிமுகம் செய்த பெருமைக்குரிய இவரால் 300 சிறுகதைகளும் 6 நாவல்களும் எழுதப்பட்டன. பிற்காலத்தில் இந்த சிறந்த எழுத்தாளரின் உள்ளம் நரம்புத்தளர்ச்சியின் காரணமாக பலவீனமடைந்தது. இவர், 1893 ஆம் ஆண்டு ஜூலை 6 ஆம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார்.




## என்டன் ச்செகொஃப்



ரஷ்யாவில் பிறந்த மற்றுமொரு சிறந்த கலைஞராக என்டன் ச்செகொஃப் கருதப்படுகின்றார். இவர் உலக இலக்கியவாதிகளின் அன்புக்குப் பாத்திரமானவராவார். மேலும், ரஷ்ய சிறுதை மரபை உலகிற்கு அறிமுகம் செய்தவர்களில் ஒருவராகவும் விளங்குகிறார். தமது அனுபவங்கள் வழியாக நாடகக் கலையைப் போஷித்தார்.

1860 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி பிறந்த என்டன் ச்செகொஃப், குடும்பத்தில் மூத்த பிள்ளையாவார். கிராமப் பாடசாலையில் ஆரம்பக் கல்வி கற்ற இவர், நன்கு கல்வி கற்கக்கூடியவராக விளங்கினார். காலப்போக்கில் மொஸ்கோ பல்கலைக்கழகத்தில் வைத்தியத்துறையில் கற்று வைத்தியரானார். எனினும், இவருக்கு இலக்கியத்தின்மீது பற்றுதல் இருந்தது. இதனால், வைத்தியராகக் கடமையாற்றிக்கொண்டே பிரான்ஸிய இலக்கியம் தொடர்பாகக் கற்றார். பின்னர் வைத்தியத் தொழிலைக் கைவிட்டு எழுத்துத் துறையில் களமிறங்கினார்.

இவரால் எழுதப்பட்ட முதலாவது சிறுகதைத் தொகுதிக்கு வாசகர்களிடையே நல்ல வரவேற்பு இருந்தது. இதனால், உற்சாகமடைந்த ச்செகொஃப், பத்திரிகையில் கட்டுரைகளை தொடர்ந்து எழுதினார். இவரால் எழுதப்பட்ட சிறுகதைத் தொகுதிக்கு ரஷ்ய இலக்கியவாதிகளுக்கு வழங்கப்படும் உயர் இலக்கிய விருதான 'புஷ்கின் விருது' வழங்கப்பட்டது. ச்செகொஃப், நாடகத் துறையிலும் ஆர்வம் காட்டினார். பாடசாலை செல்லும் காலத்திலிருந்தே நாடகத் துறையில் ஆர்வம் காட்டிவந்தார். இவர் எழுதிய நாடகங்கள், நல்ல வரவேற்பினைப் பெற்றன. பிற்காலத்தில் காச நோயால் மிகவும் அவதிப்பட்ட ச்செகொஃப், தனது நோய்க்கு சிகிச்சை பெறும் பொருட்டு வெளிநாடுகளுக்கும் சென்றார். 1904 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதி இவர் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். இவர் ஒரு முறை இலங்கைக்கும் வருகை தந்துள்ளார்.

(அ)




(மிகுதி அடுத்த இதழில்)

Digitized by Noolaham Foundation

# வாய்மொழித் தொடர்பாடலின் பணிகள்

குறித்த நபர்களிடையே தகவல்கள், கருத்துக்களை, பரிமாறிக்கொள்வதற்கான இலகுவான தொடர்பாடல் வடிவமாகவும், மனித தொடர்பாடலின் ஆரம்பகால தொடர்பாடல் வடிவமாகவும் வாய்மொழி அல்லது சொல்சார் தொடர்பாடலை அடையாளப்படுத்திக்கொள்ள முடிகின்றது. அன்றாட வாழ்வியலுடன் மிக நெருக்கமுள்ள தொடர்பாடல் செயன்முறையாக காணப்படுகின்றது.



✱ செய்திகள், தகவல்கள், கருத்துக்களை பரிமாறிக் கொள்ளுதல் அல்லது முன்வைத்தல்.

✱ உணர்வு ரீதியான விடயங்களான அன்பு, பாசம் போன்றவற்றை பரிமாறிக் கொள்ளுதல்.

✱ குழுவாக அதாவது சுமுகமான சூழலைப் பேணுதல் அல்லது உருவாக்கிக்கொள்ளுதல்.

✱ முரண்பாடுகள், பிரச்சினைகளை ஆரோக்கியமான முறையில் தீர்வு காண்பதற்கு.

✱ இடைவினைத் தொடர்பை வலுப்படுத்துதல்.

✱ அமைதியானதும், சமாதான சூழலை நீண்டகால ரீதியில் உருவாக்குதல்.




✱ ஆலோசனை வழங்குதல் பணியை முன்னெடுத்தல்.

✱ அறிவூட்டல், அறிகை செயற்பாட்டில் ஊக்கமிக்கதாக ஈடுபடுதல்.

✱ குறித்த விடயம்சார் தூண்டுதலை வழங்குதல்.

✱ உள உணர்வுகளை ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல் என்ற அடிப்படைகளில் வாய்மொழித் தொடர்பாடல் வடிவத்தின் வகிபங்கு நிலைகளை இனங்கண்டுகொள்ளக் கூடியதாகவுள்ளன.

## வாய்மொழித் தொடர்பாடல் தேர்ச்சிகள்

தேர்ச்சி என்பது திறன் நிலைகளுடன் தொடர்புடைய எண்ணக்




கருவாக அமைகின்றது. வாய்மொழித் தொடர்பாடல் விளைதிறன், வினைத்திறன் மிக்கதாக விளங்குவதற்கும், அதற்கான புறச் சூழ்நிலைகளை உருவாக்குவதற்கும் தேர்ச்சி நிலைகள் அடிப்படையாக அமைகின்றன. வாய்மொழித் தொடர்பாடலை துணிபவரிடம் பல்திறன் மிக்க ஆளுமை பண்புத் தரங்கள் கட்டியெழுப்பப்படுதல் அவசியமானது. வாய்மொழித் தொடர்புக்கான தேர்ச்சி நிலைகளை வளர்த்துக் கொள்வதுடன், பின்வரும் விடயங்களை கவனத்தில்



கொண்டு சொல்சார் அதாவது வாய்மொழித் தொடர்பாடல் கருமத்தை முன்னெடுத்தல் ஆரோக்கியமான விளைவுகளுக்கு வித்திடும்.


✱ மொழிசார் திறன் தகவுகளையும் அவற்றை பிரயோகிக்கின்ற நிலைமைகளையும் உருவாக்கிக் கொள்ளுதல் அவசியமானது.

✱ வாய்மொழித் தொடர்பில் ஈடுபடுகின்ற இரு நபர்களிடமும் ஊடகமாகப் பயன்படுத்தப்படுகின்ற மொழிசார் அறிவுநிலையை உறுதிப்படுத்திக்கொள்ளும் ஆற்றல் வேண்டும்.

✱ வாய்மொழித் தொடர்பில் தகவலை வழங்குபவரின் மொழியை விடத் தகவலைப் பெறுகின்றவரின் மொழியிலேயே வழங்கப்பட வேண்டும்.

(தொடரும்)

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.




கீழே தரப்பட்டுள்ள வர்ணங்களைக் கொண்டு படங்களுக்கு நிறந்தீட்டுக.




ஒருமை, பன்மை சொற்களை எழுதுக.




## I மற்றும் j எழுத்துக்களை எழுதுவோம்

I　　　　i




I I I I I I I I I　i i i i i i i i i i

I I I I I I I I I　i i i i i i i i i i

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் கமலாவுக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

**කමලා:** **අම්මේ! ඔයාට ආරංචි නැද්ද?**
அம்மே! ஒயாட்ட ஆரன்ச்சி நெத்த?
கமலா: **அம்மா! நீங்கள் கேள்விப்படவில்லையா?**

**අම්මා:** **මොනවද දුව?**
மொனவத துவ?
அம்மா: **என்ன மகள்?**

**කමලා:** **සරත් අයියා ඇක්සිඩන්ට් වෙලා.**
சரத் அய்யா எக்ஸிடன்ட் வெலா.
கமலா: **சரத் அண்ணா விபத்துக்குள்ளாகி உள்ளார்.**

**අම්මා:** **අයියෝ ඒ කවද ද?**
ஐயோ ஏ கவத த?
அம்மா: **ஐயோ அது எப்போது?**

**කමලා:** **අද උදේ අම්මේ.**
அத உதே அம்மே.
கமலா: **இன்று காலையில் அம்மா.**

**අම්මා:** **ඔයා කොහොමද දන්නේ?**
ஒயா கொஹொமத தன்னே?
அம்மா: **உனக்கு எப்படித் தெரியும்?**

**කමලා:** **මට සරත් අයියගේ නංගි කිව්වේ.**
மட்ட சரத் அய்யகே நங்கி கிவ்வே.
கமலா: **எனக்கு சரத் அண்ணாவின் தங்கை சொன்னாள்.**

**අම්මා:** **කොහොමද ඇක්සිඩන්ට් වෙලා තියෙන්නේ?**
கொஹொமத எக்ஸிடன்ட் வெலா தியென்னே?
அம்மா: **எப்படி விபத்து நடந்திருக்கிறது?**

**කමලා:** **අයියාගේ මෝටර් බයිසිකලය ත්‍රීවීලරයක හැප්පිලා.**
அய்யாகே மோட்டர் பைசிகளய த்ரீவீலரயக்க ஹெப்பிலா.
கமலா: **அண்ணாவின் மோட்டார் சைக்கிள் ஒரு முச்சக்கரவண்டியில் மோதியுள்ளது.**

**අම්මා:** **අයියාට ගොඩක් අමාරු ද?**
அய்யாட்ட கொடக் அமாரு த?
அம்மா: **அண்ணாவுக்கு மிகவும் வருத்தமா?**

**කමලා:** **ඔව් අම්මේ. කකුල කැඩිලලු. ඔලුවෙත් තුවාලලු. නැන්දා අඬනවා.**
ஒவ் அம்மே. ககுல கெடிலலு. ஒலுவெத் துவாலலு. நெந்தா அன்டனவா.
கமலா: **ஆம் அம்மா. கால் உடைந்துள்ளதாம். தலையிலும் காயமாம். மாமி அழுகிறார்.**

**අම්මා:** **අයියෝ පවු දුව. අපි හවසට යමු බලන්න. මට හරි දුකයි.**
ஐயோ பவு துவ. அப்பி ஹவசட்ட யமு பலன்ன. மட்ட ஹறி துகய்.
அம்மா: **ஐயோ பாவம் மகள். நாங்கள் பின்னேரம் பார்க்கப் போவோம். எனக்குச் சரியான கவலை.**

**කමලා:** **අපි හවස යමු අම්මා.**
அப்பி ஹவச யமு அம்மா.
கமலா: **நாங்கள் பின்னேரம் போவோம் அம்மா.**

### பயிற்சி

**இடைவெளிகளை நிரப்புக.**

1. **අයියා .................... වෙලා.**
2. **අද උදේ ....................**
3. **.................. යමු බලන්න.**




**He, She, It** முதலான பிரதிப் பெயர்ச்சொற்களுக்குப் (Pronouns) பதிலாக எழுவாய் பகுதியில் பெயர்ச்சொற்களைக் (Nouns) கையாண்டு, 'Does' சகிதம் அமைக்கப்படுகின்ற உடன்பாடு வாக்கியங்களையும் வினா வாக்கியங்களையும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) அஜித் தினமும் பாடசாலைக்குப் போகின்றான்.
Ajith goes to school daily.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஆ) அஜித் தினமும் பாடசாலைக்குப் போகின்றானா?
Does Ajith go to school daily?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

| | |
|---|---|
| ✱ Ajith goes.<br>அஜித் போகின்றான். | ✱ Does Ajith go?<br>அஜித் போவதுண்டா? |

**குறிப்பு:** மேற்படி வினா வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள 'Does' என்பதற்கு தனியான அர்த்தம் பெறப்படுவதில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் 'Does' என்பது உதவிபுரியும் வினைச்சொல்லாக (Helping Verb) மாத்திரமே செயல்பட்டுள்ளது.

(இ) லலிதா ஒவ்வொரு ஞாயிறும் நூலகத்துக்குப் போகின்றாள்.
Lalitha goes to the library every Sunday.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஈ) லலிதா ஒவ்வொரு ஞாயிறும் நூலகத்துக்குப் போவதுண்டா?
Does Lalitha go to the library every Sunday?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

| | |
|---|---|
| ✱ Lalitha goes.<br>லலிதா போகின்றாள். | ✱ Does Lalitha go?<br>லலிதா போவதுண்டா? |

(உ) இந்த நாய் இரவில் வெளியே போகின்றது.
This dog goes out at night.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஊ) இந்த நாய் இரவில் வெளியே போவதுண்டா?
Does this dog go out at night?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

| | |
|---|---|
| ✱ This dog goes.<br>இந்த நாய் போகின்றது. | ✱ Does this dog go?<br>இந்த நாய் போவதுண்டா? |

(எ) இந்தப் பூனை இரவில் சமையலறைக்குள் போகின்றது.
This cat goes into the kitchen at night.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஏ) இந்தப் பூனை இரவில் சமையலறைக்குள் போகின்றதா?
Does this cat go into the kitchen at night?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

| | |
|---|---|
| ✱ This cat goes.<br>இந்தப் பூனை போகின்றது. | ✱ Does this cat go?<br>இந்தப் பூனை போவதுண்டா? |

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எமது சிறிய வீட்டுத்தோட்டம்:

# வீட்டுத்தோட்டத்திற்கு ஏற்றவாறு பயிர்களை தெரிவு செய்வோம்!



வீட்டுத்தோட்டச் செய்கைகள் குறித்து எமக்கு ஓரளவு தெரியும். ஆனால், தற்போது வீட்டுத்தோட்டத்தில் எவ்வகையான பயிர்களை நாட்டலாம் என்ற ஒரு சந்தேகம் எம் அனைவருக்கும் ஏற்பட்டிருக்கும். அந்தவகையில், வீட்டில் அன்றாட உணவு முறைகளைப் பின்பற்றி அதனூடாக வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியமான உணவுகளை பட்டியல் இட்டு அறிந்துகொள்ளலாம். இந்த பட்டியலை ஆசிரியரிடம் காட்டி பயிர்களைத் தெரிவுசெய்து கொள்ளவும் முடியும்.

சூரிய ஒளி படும் இடம், மண், நீர் ஆகியவற்றின் அடிப்படையில் பயிர்களை நாட்டும் இடமும் மாறுபடும். தோட்டத்தின் வேலியில் நடப்படும் பயிர்களை இரண்டு வகைப்படுத்தலாம். கொடி வகை (பாகற்காய், புடலங்காய்) கொடித்தோடை, திராட்சை கீரை வகைகள், பூ வகைகள் என்பன சிறந்தவை. முருங்கை போன்றவற்றை வேலிக்கு அருகாமையில் நாட்டலாம். இதனூடாக வீட்டுத்தோட்டத்திற்குத் தேவையான உரங்களையும், பசளைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

சமையலறைக்கு அருகாமையில் கறிவேப்பிலை, இஞ்சி, கொத்தமல்லி, மஞ்சள், மிளகு, ஆகிய பயிர்களை நாட்டிக்கொள்ளவும் முடியும். கிணற்று நீர் வடிந்து செல்லும் இடத்தில் வாழை, அல்லி, கங்குன் போன்ற தாவரங்களையும் வீட்டுத்தோட்டத்தில் நன்கு வெயில் வரும் இடங்களில் மிளகாய், தாக்காளி, பப்பாளி, கொய்யா, றம்புட்டான், மாமரம், அன்னாசி, சீத்தாமரம், தோடை, எலுமிச்சை ஆகிய பழமரங்களையும் நாட்டலாம்.

இவற்றைத் தவிர, வீட்டுத்தோட்டத்தின் இடவசதிக்கு ஏற்ப பயிரிடக்கூடிய சில பயிர்கள் பின்வருமாறு: கீரைகள், வல்லாரை, பொன்னாங்கண்ணி, கங்குன், சிறுகீரை, கொஹில, மற்றும் கிழங்குகள்: உருளைக் கிழங்கு, வற்றாளைக்கிழங்கு, மரவள்ளி, கொடிக்கிழங்கு என்பனவாகும். இவ்வாறான பயிர்களை உயரமான தாவரங்களின் நிழலில் நாட்டி வைக்க முடியும். அதே போன்று கோப்பி, வெற்றிலை, ஈரப்பலா, முருங்கை, ஆகிய தாவரங்களையும் கற்றாலை போன்ற மருத்துவக் குணம்மிக்க தாவரங்களையும் நாட்டமுடியும்.



## விஜய் மாணவர் கழகம்



அங். இல: 5498
எஸ்.பாத்திமா சஹ்ரா, அல்லைநகர்-06, தோப்பூர்.



அங். இல: 5499
த.விதுர்சிக்கா, பழைய ஊர், மன்னம்பிட்டி.



அங். இல: 5500
அய்னா ஹலீம்தீன், ஜும்மா மஸ்ஜித் வீதி, அக்பர் டவுன்,



அங். இல: 5501
எம்.எச்.முஹம்மத், பல்லேகம, தெல்தோட்ட.



அங். இல: 5502
த.ஹஸ்வினி, பழைய ஊர், மன்னம்பிட்டி.



அங். இல: 5503
த.விதுர்ஷன், பழைய ஊர், மன்னம்பிட்டி.



அங். இல: 5504
க.வியாசன், மலையன் தோட்டம், உடுப்பிட்டி.



அங். இல: 5505
எஸ்.பிரசாந் மதுசங்க, திவிதுரை தோட்டம், திவிதுரை.



அங். இல: 5506
ராதி அஹமட், மோரகல, எஹலியகொட.



அங். இல: 5507
ஏ.டோல்ரன் நெவில்ஸ், ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.

## தெரிந்து கொள்வோம்



- நீல அல்லி (Nymphaea Caerulea) இலங்கையின் தேசிய மலராகும். இது புகழ்பெற்ற வரலாற்றுச் சின்னமொன்றில் காணப்படுகின்றது. அது எந்தக் கலைப்படைப்பில் உள்ளது?
  சீகிரியா ஓவியங்களில்



- பூட்டானின் தேசிய பறவை எது?
  காகம்



- மச்சுபிச்சு கோட்டை எங்கு அமைந்துள்ளது?
  மாயன் நாகரீகத்தில் நிர்மாணிக்கப்பட்ட கோட்டை. இது பேரு நாட்டில் உள்ளது
- இந்தியாவில் பிறந்து உலகில் கணித மேதையாகப் புகழ்பெற்றவர் யார்?
  ஸ்ரீனிவாச ராமனுஜம்



- ஐக்கிய அமெரிக்காவில் அணுகுண்டை தயாரித்த ஜனாதிபதி யார்?
  பிராங்ளின் ரூஸ்வெல்ட்
- உலகில் நூறு வீதம் எழுத்தறிவு கொண்ட நாடு எது?
  ஜோர்ஜியா



- குற்றவியல் பிரேரணையில் நாடாளுமன்றத்தால் வெளியேற்றப் பட்ட முதலாவது பிரதம நீதியரசர் யார்?
  சிராணி பண்டாரநாயக்க
- இலங்கையின் அதிவேகப் பாதைகள் எவ்வாறு பெயரிடப்பட்டுள்ளன?
  E-1 கொட்டாவ - காலி
  E-2 கட்டுநாயக்க - கொழும்பு பாதையை இணைக்கும் பகுதி
  E-3 கட்டுநாயக்க - அதிவேகப்பாதை



- 'சத்திய சோதனை' எனும் நூல் மகாத்மா காந்தியின் சுயசரிதை வாழ்க்கை வரலாறாகும். 'டைம்ஸ் கெரில்லா' எனும் சுயசரிதை நூல் யாருடைய படைப்பாகும்?
  கியுபா ஜனாதிபதி பிடல் கெஸ்ட்ரோ
- பெற்றோரைக் கவனிக்காத பிள்ளைகளுக்கு சிறைத் தண்டனை விதிக்கச் சட்டம் கொண்டு வந்துள்ள நாடு எது?
  சீனா

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

படத்தை இங்கே ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ..................................................

முகவரி: ..................................................

..................................................

பாடசாலை: ..................................................

வகுப்பு: ..................................................

திகதி: ..................................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரோலஸ் லினேயஸ் (Carolus Linnaeus)



புராதன காலந்தொட்டே அங்கிகளைப் பெயரிடும் பல முறைகள் காணப்பட்டபோதும் 'கரோலஸ் லினேயஸ்' என்பவரால் 1735 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட விஞ்ஞான முறைப் பெயரீடே மிகப் பொருத்தமானதென ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அது இரு சொற் பெயரீட்டு முறை எனப்படும்.

தாவரங்களின் நவீன பகுபாட்டு முறையை மற்றும் பெயரீட்டு முறையை பற்றி 1753 இல் அவரால் வெளியிடப்பட்ட Species Plantarum என்னும் நூலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

விலங்குகளுக்கான நவீன பகுபாட்டு முறை பற்றி 1758 இல் அவரால் வெளியிடப்பட்ட 'Systema Naturea' என்னும் நூலில் பத்தாம் பதிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இச் சொற்பெயரீட்டு முறைக்கமைய அனைத்து உயிரினங்களுக்குமான பெயரீடுகள் இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும். சாதிப் பெயர் (Generic name) மற்றும் இனப் பெயர் (Specific epithetd) ஆகியனவே அவையாகும்.

எம்.ஐ.எப்.பர்ஹானா,
இர/அல்-அக்ஷா மு.ம.வித்.,எஹலியகொடை.

## தாவரங்களுக்கான இளமைப்பெயர்கள்

- நெல் - நாற்று
- புகையிலை - நாற்று
- பனை - வடலி
- பலா - கன்று
- மா - கன்று
- அரசு - கன்று
- எலுமிச்சை - கன்று
- வேம்பு - கன்று
- தென்னை - கன்று/பிள்ளை
- கமுகு - கன்று/பிள்ளை
- வாழை - குட்டி/பிள்ளை

ஷரிஆ ஷஹானி ரிஸ்வான்,
தமிழ் மகளிர் மகா வித்.,பதுளை.



## அழகு

மலருக்கு அழகு மணமாகும்!
மனிதனுக்கு அழகு நற்குணமாகும்!
உணவுக்கு அழகு சுவையாகும்!
உறவுக்கு அழகு ஒற்றுமையாகும்!
வாழ்வுக்கு அழகு லட்சியமாகும்!
வெற்றிக்கு அழகு நேர்மையாகும்!
மனிதனுக்கு அழகு வீரமாகும்!
எம்போன்ற மாணவர்க்கு அழகு
பணிவாகும்!

ஐ.எஸ்.எஃப்.சப்ரா,
அ/நாச்சியாதீவு மு.ம.வித்.,

## நோய்கள்

01. புற்றுநோயைக் குணப்படுத்த உதவும் கதிர்வீச்சு எது?
ரேடியம்

02. தைபொய்ட் காய்ச்சல் எதன்மூலம் பரவுகிறது?
அசுத்த நீரால்

03. எலியிலிருந்து மனிதருக்குப் பரவும் நோய் எது?
ப்ளேக்

04. பித்தக்கான் தடைப்படுவதனால் ஏற்படும் நோய் எது?
செங்கண்மாரி

எம்.ஜே.எஃப்.நஸ்ரின்,
அல்-அகீல் முஸ்லிம் ம.வித்., கொடியாகும்புர.

## வாசிப்பின் முக்கியத்துவம்



வாசிப்பு ஒரு மனிதனை பூரணமாக்குகிறது. எவ்வாறெனில், ஒரு மனிதன் பல விடயங்களை வாசிப்பதன் மூலம் அவனது அறிவு விருத்தியடைவதுடன், வெவ்வேறு வகையான வரலாறுகள், தொழில் நுட்பங்கள் பற்றிய விடயங்களை அறிந்து அதனை தக்க சமயத்தில் பயன்படுத்திக் கொள்ள முடிகிறது. இதனால், அவன் எங்கும், எதிலும் முதல்நிலைப்படுத்தப்படுகிறான். 'கண்டதும் கற்க பண்டிதனாவான்' என்பதுபோல நூல்கள் பத்திரிகைகள், என்பனவற்றை நிறையவே வாசிப்பதனால் எமது அறிவு வளர்ச்சியடைய முடியும். எனவே, வாசியுங்கள்! பூரணமடையுங்கள்!.

எஸ்.நந்தினி,
கம்மடுவ த.ம.வித்.,
ஒப்பல்கல.

## வரி விதிப்பு






விஜயபுரி நாட்டின் மன்னர் உக்கிரப் பெருவழுதி, தமது நாட்டில் அதிக வரிகளை விதித்து மக்களை மிகவும் கொடுமைப்படுத்தி வந்தார். மன்னரின் இந்தக் கொடுஞ்செயலை அவரிடம் எடுத்துச் சொல்ல யாரும் முன்வராமல் அஞ்சிக் கொண்டிருந்தனர்.

ஒருநாள் மன்னர் தன் மந்திரியுடன் நகர்வலம் புறப்பட்டார். நகர்வலம் வந்துகொண்டிருந்தபோது, வானத்தில் கருமேகங்கள் திரண்டு வருவதைக் கண்டு மன்னர் உக்கிரப் பெருவழுதி, "இப்பொழுது மழை வரும் போலிருக்கிறதே" என்றார்.

"கண்டிப்பாக இப்போது மழை வராது... இந்தக் கருமேகங்கள் நம் நாட்டுக்குள் நுழையவே நுழையாது மன்னா" என்றார் மந்திரி.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்?" என்று கேட்டார் மன்னர்.


"மன்னா, அந்தக் கருமேகங்கள் நம் நாட்டிற்குள் நுழைந்தால், அவற்றுக்கும் நீங்கள் கடுமையான வரிகளை விதித்துவிடுவீர்களே... அதனால் அவை ஒருபோதும் நமது நாட்டிற்குள் நுழையாது" என்றார் மந்திரி அடக்கத்துடன்.

மந்திரியின் இந்த விளக்கத்தைக் கேட்ட மன்னர், விதவிதமான வரிகளை விதித்து மக்களைக் கொடுமைப்படுத்திய தனது தவறை உணர்ந்தார்.

நாட்டில் விதிக்கப்பட்டிருந்த கடுமையான வரிகளை நீக்கும்படி உடனடியாக உத்தரவிட்டார். இதனால், மக்களின் துன்பமெல்லாம் மறைந்து மகிழ்ச்சியுடன் வாழலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுக்கெழுத்துப் போட்டி இல.69




**மேலிருந்து கீழ்**

01. தீமை செய்பவர்கள் ஈற்றில் செல்லும் இடம்.
02. தானியங்களைப் புடைக்க உதவும்.
05. வலிமை.
06. முக்கனிகளில் ஒன்று.
07 நாங்கள். (தலைகீழ்)
08. ஏறி-இறங்க உதவும் ஒரு சாதனம்.

**இடமிருந்து வலம்**

01. தீபாவளிக்கு காரணகர்த்தா.
03. பழம்.
04. பலர் கூடி ஆடும் நடன வகையொன்று.
07. 'தேசம்' என்றும் அர்த்தப்படுத்தலாம்.
08. வறுமையில் வாடுபவர்.
09. நிலம்.
10. (ஆண்கள்) உச்சந்தலையில் முடிந்துகொள்ளும் முடிக்கற்றை. (மாறியுள்ளது)

குறுக்கெழுத்துப் போட்டி இல.68 விடைகள்






'நடராஜ் அறிவுக்கு விருந்து' பகுதியிலுள்ள 1, 2, 3 ஆகிய போட்டிகளுக்கான விடைகளை தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி, 29.01.2014 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.

நடராஜ் அறிவுக்கு விருந்து - 08
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

பரிசுப் பொதி
1ஆம் பரிசு ரூ. 700/=
2ஆம் பரிசு ரூ. 500/=
3ஆம் பரிசு ரூ. 300/=


**விடுகதைகளுக்கு விடை தருக** (2)

1. பார்த்தால் பச்சைக்கிளி; கையில் அமர்ந்தால் சிவந்தகிளி. அது என்ன? ........................
(பச்சைக்கிளி/மருதாணி)

2. பல அடுக்கு மாளிகையில் இனிப்பு விருந்து. அது என்ன? ................................
(தேன்/உணவகம்)

3. திரியில்லாத விளக்கு; தினமும் எரியும் விளக்கு. அது என்ன? ................................
(மின்னல்/சூரியன்)


**சரியான எண்ணிக்கையில் வட்டமிடுக**



| | | |
|---|---|---|
| (1) | 4 | 1 |
| (2) | 2 | 5 |
| (3) | 6 | 5 |
| (4) | 5 | 8 |
| (5) | 3 | 4 |
| (6) | 5 | 3 |

நடராஜ் அறிவுக்கு விருந்து போட்டிகளுக்கான விடைகளை அனுப்பும்போது, உங்கள் பெயர், வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், பாடசாலை, நகரம் என்பனவற்றை கட்டாயம் எழுதி அனுப்புங்கள்.

**அருகிலுள்ள சொற்களை உரிய கட்டங்களில் எழுதி, குறுக்கெழுத்துப் போட்டியைப் பூர்த்தி செய்க** (1)





**நடராஜ் அறிவுக்கு விருந்து - 06 விடைகள்**

போட்டி: 01

1. மேகம் - முகில்
2. சூரியன் - தினகரன்
3. ஆழி - கடல்




போட்டி: 02



போட்டி: 03



**நடராஜ் அறிவுக்கு விருந்து - 06 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்**

1ஆம் பரிசு
ஆர். அபிஷேக், கொழும்பு-14.


2ஆம் பரிசு
ஆதிப் அஹமட், பேருவளை.

3ஆம் பரிசு
ஷிபாயா, இல்லவதுர.

பாராட்டுப் பெறுவோர்:

- வி.எனிஷ்,பதுளை.
- எஸ்.ஸ்ரீபிரகாஷ், இம்புல்பிட்டிய.
- எம்.சருக், ஹெட்டிபொல.
- ஆர்.துவாஹரணி, இறத்தோட்டை.
- யுஷ்ராஹ் சப்ரி, வேஉட.
- இ.ஹரிதாஸ், முல்லைத்தீவு.
- எம்.நுஸ்ரி, திஹாரி.
- பி.இவோன், வத்தளை.
- எஃப்.அமீரா, மாத்தறை.
- பா.சிபி, கல்முனை.

**படங்களுக்குரிய ஆங்கிலச் சொல்லில் ✓ அடையாளமிடுக** (3)




Sponsored by




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சுற்றாடலுக்கு அழகு சேர்க்கும்

# நீர்வீழ்ச்சிகள்


உயிர்ப்பல்வகைமையில் வளமானதோர் அழகிய நாடே இலங்கை ஆகும். எமது நாட்டிற்கு கிடைக்கப்பெற்றுள்ள இயற்கையின் கொடைகள் ஏராளம். அதில் முக்கிய இடம் வகிப்பது உயரமான மலைத்தொடர்களாகும். அந்த அழகிய மலைத்தொடர்களில் உற்பத்தியாகி கீழ் நோக்கிப் பாயும் நீர்வீழ்ச்சிகள் எமது நாட்டின் அழகை மேலும் மெருகூட்டுகின்றன. இந்த அழகிய நீர்வீழ்ச்சிகள் இலங்கையின் சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதுடன், மின்சார உற்பத்தியை மேற்கொள்வதற்கும் உதவுகின்றன. அந்தவகையில், சில முக்கியமான நீர்வீழ்ச்சிகள் பின்வருமாறு:



போபத் நீர் வீழ்ச்சி (30மீ)




பம்பரகந்த நீர்வீழ்ச்சி (263மீ)




தியலும நீர்வீழ்ச்சி (222மீ)




துன்ஹிந்த நீர்வீழ்ச்சி (63மீ)




பலாங்கொட நீர்வீழ்ச்சி



சென். கிளயர்ஸ் நீர்வீழ்ச்சி (80மீ)



டெவோன் நீர்வீழ்ச்சி (97மீ)



சிறிய துன்ஹிந்த நீர்வீழ்ச்சி (30மீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டுபிடிப்புகள்



ரென்சொம் எளி ஒல்ட்ஸ் (Ransom Eli Olds)
1913 - அமெரிக்கா



பூட்டல் பட்டறை



ஜே.ரொபர்ட் ஓபன்ஹெய்மர் (J.Robert Oppenheimer)
1945 - அமெரிக்கா



அணுகுண்டு



சார்ஸ்ஸ் அல்ஜர்னொன் பர்சன்ஸ் (Charles Algernon Parsons)
1884 - பிரிட்டன்



நீராவி விசையாழி



ஜேம்ஸ் லியோனார்ட் ப்லிம்ப்டன் (James Leonard Plimpton)
1863 - அமெரிக்கா



உருளை சக்கர சப்பாத்து



பெட்ராசி பொயனாரு (Petrache Poenaru)
1827 - ரோம்



ஃபவுண்டன் பேனா



ஐவன் ப்ளோட்னிகொவ் (Ivan Plotnikov)
1935 - ரஷ்யா



Kirza பூட்ஸ்

# உயிரியல் வகைப்பாடு

## செலோசியா



*A*maranthaceae குடும்பத்தின் அலங்காரச் செடிகளின் ஒரு சிறிய இனம் இதுவாகும். இது கிரேக்க மொழியில் Kelos என்று அழைக்கப்படுகின்றது. அதாவது, சுடர் அல்லது நெருப்புப் போன்ற மலர்த்தலைகளை இது குறிக்கின்றது. இந்த பூ பொதுவாக Woolflowers அல்லது வெல்வெட் பூ என்றும் அழைக்கப்படுகின்றது. அத்துடன், இவை கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் *Highlands* என்றும் கூறப்படுகின்றது. இது ஒரு மூலிகைச் செடியாகையால், குடற் புழுக்களைக் கட்டுப்படுத்தல், வாய் புண்கள் மற்றும் கண் பிரச்சினைகளுக்கும் மருத்துவமளிக்கப் பயன்படுகின்றது. இதன் இனங்கள் விதைகள்மூலம் பரப்பப்படுகின்றன. செலோசியா பூ இனம் சீனா மற்றும் பிற நாடுகளில் அலங்காரச் செடியாகவும் வளர்க்கப்படுகின்றது. ஸ்பெயினில் இப்பூ 'சேவல் சீப்பு' என்று அழைக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| ராச்சியம் | : தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : பூக்கும் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : இருவித்திலைத் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : *Core eudicots* |
| வரிசை | : *Caryophyllales* |
| குடும்பம் | : *Amaranthaceae* |
| துணைக்குடும்பம் | : *Amaranthoideae* |
| பேரினம் | : *Celosia L.* |

## பார்பெடன் டெய்ஸி



சூரியகாந்தி பூ குடும்பத்தைச் சேர்ந்த அலங்காரச் செடிகளின் பேரினம் ஜேர்பெரா மலராகும். இம்மலர் பெருமளவில் தென்கிழக்கு ஆபிரிக்கா நாடுகளில் காணப்படுகின்றது.

இந்த ஜேர்பெரா மலர் 'பார்பெடென் டெய்ஸி' என்று பொதுவாக அழைக்கப்படுகின்றது. இந்த பூ அழிவடையாமல் இனப்பெருக்கம் செய்யப்படுகின்றது. ஒரு செடியில் பூக்கும் பூவானது, ஒற்றையாக உயரமாகப் பூக்கக்கூடியது. இப்பூ சிவப்பு, மஞ்சள், இளஞ்சிவப்பு, செம்மஞ்சள் போன்ற பலவித நிறங்களில் காணப்படும்.

| | |
|---|---|
| ராச்சியம் | : தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : பூக்கும் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : இருவித்திலைத் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : *Asterids* |
| வரிசை | : *Asterales* |
| குடும்பம் | : *Asteraceae* |
| துணைக்குடும்பம் | : *Multisoideae* |
| பேரினம் | : *Gerbera* |
| இனம் | : *G-jamesonii* |

## டயன்தஸ்



டயன்தஸ் மலர் *Caryophyllaceae* குடும்பத்தைச் சேர்ந்த 300 இனங்களின் பேரினமாகும். இந்த பூவினங்கள் பெரும்பாலும் குட்டைச் செடியாகவே காணப்படுகின்றன. இதன் பூக்கள் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கக்கூடியவை. டயன்தஸ் பூக்கள் மிகவும் வித்தியாசமான, அழகான பூக்களாகும். ஐந்து இதழ்களைக் கொண்ட இப்பூ நடுவில் ஒரு நிறத்தையும் சுற்றிலும் வெள்ளை மற்றும் பல நிறங்களில் நட்சத்திரம் போல் காணப்படும். இந்த பூக்கள் பலவித வர்ணங்களில் பூக்கக்கூடியவை. டயன்தஸ் என்பது கிரேக்க மொழியில் 'டியோஸ்' (கடவுள்) மற்றும் *anthos* (பூ) என்று கருதப்படுகின்றது. மேலும், இப்பூ பொதுவாக *'Sweet William'* என்றும் அழைக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| ராச்சியம் | : தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : பூக்கும் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : இருவித்திலைத் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : *Core eduicots* |
| வரிசை | : *Caryophyllales* |
| குடும்பம் | : *Caryophyllaceae* |
| பேரினம் | : *Dianthus L.* |

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படகை செலுத்துவதில் துடுப்பின் பங்களிப்பு

கடல் சாரணியமும் தற்போது இலங்கையில் பிரபல்யம் அடையத் தொடங்கியுள்ளது. பல சாரணர்கள் கடல் பகுதிகளில்



கடல் சாரணியம் தொடர்பான பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு கடல் சாரணியத்தில் ஈடுபடுகின்ற புதிய சாரணர்கள் படகில் பயணம் செய்கையில் துடுப்பினை செயற்படுத்தக்கூடிய அடிப்படை ஆரம்பப் பயிற்சிகளை



பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும்.

அதன்படி, துடுப்பினை வலித்தலானது; சீரான ஒரு முறையிலேயே கையாளப்பட வேண்டும். இங்கு காட்டப்பட்டுள்ள படங்களை உன்னிப்பாக அவதானியுங்கள். படகில் ஏறுகின்ற புதிய சாரணர்கள் தமது துடுப்பினை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டு மிகவும் சக்திமிக்கதாக நீரில் துடுப்பினை வலித்து படகினை நகர்த்த முயற்சிக்க வேண்டும். இவ்வாறு



துடுப்பினை செலுத்தும் திசைக்கு ஏற்பவே இடது, வலது என்ற திசைக்கு படகு நகரும்.

### 'J' எழுத்தின் வடிவில் துடுப்பை அமைத்தல்

ஆங்கில 'J' எழுத்தின் வடிவில் நீரில் துடுப்பினை செலுத்தினால், அதன்போது படகானது சிறிது வேகத்துடன் முன்நோக்கிச் செல்லும்.



### படகின் வேகத்தைக் கூட்டல்

படகினை வேகமாக முன்நோக்கியோ அல்லது பின்நோக்கியோ செலுத்துவதற்கு துடுப்பினை இங்கு



காட்டப்பட்டுள்ளவாறு செலுத்த வேண்டும்.



# வனாந்தரப் பகுதிகளில் தற்காலிக தங்குமிடம்

சாரணர்கள் எப்போதும் வானந்தரப்பகுதிகளில் நாட்களைக் கழிப்பதற்கு மிகவும் விரும்புபவர்கள். இவ்வாறு வனப்பகுதிகளில் பயணம் செய்கையில் தங்குவதற்கான ஓய்விடமொன்றை உடனடியாக தயார் செய்யவேண்டிய தேவை எழலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் இங்கு படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு தற்காலிக ஓய்விடமொன்றை அமைத்துக்கொள்ளலாம். ஆனால், இதனை ஒரு நாளைக்கு மாத்திரமே பயன்படுத்த முடியும். இதனை அமைப்பதனால் ஓரளவிற்கேனும் வெயில் மழையிலிருந்து உங்களை காத்துக்கொள்ள முடியும். இயற்கை வளங்களான மரக்கிளைகள், மரத்தடிகள், ஆகியனவற்றைக் கொண்டு இந்த வனாந்தர இருப்பிடத்தை அமைத்துக்கொள்ள முடியும். குறிப்பிட்ட ஒரு சீரமைப்பில் தடிகளைப் பொருத்திவிட்டு அவற்றை ஆதாரமாகக் கொண்டு அவற்றின்மீது மரக்கிளைகளைப் படர்த்தி இந்த தங்குமிடத்தை அமைத்துக் கொள்ள முடியும்.





# ஓடும் எலியொன்றை தயார் செய்வோம்


சாரணர்கள் கைப்பணி செய்வதிலும் கைதேர்ந்தவர்களே. இதோ! அவ்வாறான மிக எளிய வழிமுறையில் அமைக்கக்கூடிய ஓடுகின்ற எலியொன்றை தயார்ப்படுத்தும் முறையொன்றைப் பார்ப்போம்.



போத்தல் மூடியொன்றை எடுத்துக் கொள்ளுங்கள். அத்துடன், கண்ணாடி மாபிள் பந்து அல்லது ஒன்றினையும் எடுத்துக்கொள்ளுங்கள். பந்தின்மீது மூடியை வைத்து, மூடியில் மூக்கு, கண், வாய், மீசை ஆகியனவற்றை வரையுங்கள்.




மட்டையொன்றில் காதுகளை வரைந்து உரிய இடத்தில் ஒட்டிக்கொள்ளுங்கள். இப்போது அதனை நகர்த்துங்கள். பந்து உருளைக்கேற்ப அது நகரும்.




# கெம்போரி நிறைவு பெற்றது



கொழும்பு மாவட்ட சாரண முகாம் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது. கல்கிசை மாவட்ட கல்லூரியில் நடைபெற்ற கொழும்பு ஜம்போரியில் இரண்டாயிரம் சாரணர்கள் கலந்துகொண்டமையும், சாரணர்களுக்கென விசேட திறமை வெளிப்பாட்டு அம்சங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இதில் குருளைச் சாரணர் தின ஊர்வலம் மற்றும் ஜனாதிபதி சாரணர், சாரணியர் ஏற்பாடு செய்த பவனிக்கான செயற்திறன் வெளிப்பாடுகளும் அனைவரையும் கவரும் விதமாக இருந்தது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையும் ஒலிப்பதிவும்

பண்டைய காலம் தொட்டு மனிதன் தனது தனிமையைப் போக்குவதற்காகவும் களைப்பைப் போக்கி புத்துணர்ச்சி பெறுவதற்காகவும் இசையை ரசித்து வந்தான். இசையை ரசிப்பதற்கான இந்த வாய்ப்புக்கள் நேரடி நிகழ்வுகளாகவே இருந்தன. ஆனால், காலப்போக்கில் ஒலியைப் பதிவுசெய்து செவிமடுக்கவும் ஒலிபரப்பவும்கூடிய கருவிகள் உருவாக்கப்பட்டன. அந்த நாள் முதல் உலகில் எங்கிருந்தாலும் இசையைக் கேட்டு ரசிக்கும் வாய்ப்பு அனைவருக்கும் சிட்டியது. அதற்கேற்ப இசையையும் ஒலியையும் பதிவுசெய்து செவிமடுக்கக்கூடிய வகையில் காலத்திற்குக் காலம் அறிமுகமான தொழில்நுட்ப உபகரணங்கள் சிலவற்றை இங்கு பார்ப்போம்.

## 1877

**ஃபோனோக்ராஃப் மற்றும் க்ரெமஃபோன்**

அமெரிக்காவைச் சேர்ந்த தொழில் முயற்சியாளரும் வர்த்தகருமான தோமஸ் அல்வா எடிசன் இதனை அறிமுகம் செய்தார்.



க்ரெமஃபோன் கருவியில் பயன்படுத்தக்கூடிய தட்டு ஒன்று.

பிற்காலத்தில் இந்த கருவி Graphophone, Zonophone ஆகிய பெயர்களினாலும் அழைக்கப்பட்டது.

தோமஸ் அல்வா எடிசன்.

இது உருளை வடிவத்தை ஒத்ததாக உருவாக்கப்பட்ட ஒரு கருவியினூடாக ஒலியை மீண்டும் ஒலிக்கச் செய்யக்கூடிய முறையாகும்.

## 1889

**ஜூக்பொக்ஸ்**

இந்த கருவியில் பணத்தை உள்ளிடக் கூடிய பகுதியில் பணத்தைப் போட்ட பின்பு, தானியங்கி முறையில் இயங்கி, இசைக்கும் ஒரு கருவியாகும். அமெரிக்காவின் முதலாவது ஜூக் பொக்ஸ் ஆனது, சென் பிரான்சிஸ்கோவில் உள்ள பெரிஸ் ரொயால் சலூனில் பொருத்தப்பட்டது.



## 1890

**ரேடியோ சாதனம்**


இத்தாலியரான குக்ளிஎல்மோ மார்க்கோனியினால் கம்பியில்லா ரேடியோ சமிக்ஞை சாதனம் அறிமுகம் செய்யப்பட்டது.



## 1975 BOOM BOX

**பூம்பொக்ஸ்**

பேஸ் ஒலி உட்பட, மிகவும் தரமான ஒலியை வழங்கும் ஸ்பீக்கர் (Loudspeaker) இரண்டினைக் கொண்ட கெசட் இயந்திரமே 'பூம்பொக்ஸ்' எனப்படுகின்றது. ghetto blaster, jambox, boomblaster, Brixton briefcase அல்லது radio-cassette என்றும் இதனை அழைப்பர்.



## 1964

**ட்ரெக்-8 டேப் கெசட் மற்றும் ப்ளேயர்**

இதுவும் காந்த நாடாமீது ஒலியைப் பதிவுசெய்யும் தொழில்நுட்பத்தைக் கொண்டிருந்தது.



## 1962

**கெசட்**

நெதர்லாந்தில் அமைந்துள்ள ஃபிலிப்ஸ் நிறுவனம், முதலாவது கெசட்டை சந்தையில் வெளியிட்டது. இது காந்த நாடாவினூடாக இசையைப் பதியும் ஒரு முறையாகும்.



## 1978

**சோனி வோக்மன்**

கையில் எடுத்துச் செல்லக்கூடிய கெசட் இயந்திரமாக சோனி நிறுவனம் இதனை அறிமுகம் செய்தது. இது அறிமுகமானதை அடுத்து, உலகம் முழுவதும் 20 மில்லியன் வோக்மன்கள் விற்பனையாகின.



## 1982

**CD ப்ளேயர்**

CD க்களை (Compact Disc) இயக்கக்கூடிய கெசட் ரேடியோ இதுவாகும். CD யில் இசையானது, டிஜிட்டல் முறையில் பதிவு செய்யப்படுகின்றது.



## 1982

**டிஜிட்டல் ரேடியோ**

டிஜிட்டல் ஓடியோ ப்ரோட்காஸ்ட்டிங் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வானொலி நிகழ்ச்சிகளை செவிமடுக்கக்கூடிய வானொலிகள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.







Billy Joel இன் 52nd Street என்ற பாடல் தொகுதியே முதன்முதல் CD யில் பதிவாகி வெளியானது.



சிறிய CD ஒன்று.

## 1992

**சோனி மினிடிஸ்க்**

சிறிய அளவிலான CD க்களை இயக்கக்கூடிய கையடக்கமான இவ்வாறான கருவிகள் அறிமுகமாகிய முதலாவது ஆண்டிலேயே 50 ஆயிரம் வரை விற்பனையாகின.



## 1984

**சோனி டிஸ்க்மன்**

கையில் எடுத்துச் செல்லக்கூடிய CD ப்ளேயரை சோனி நிறுவனம் அறிமுகம் செய்தது. ஜப்பானில் இதனை 'சிடி வோக்மன்' என்று கூறுவர்.



## 1997

**MP3 ப்ளேயர்**

டிஜிட்டல் முறையில் தயாரிக்கப்பட்ட MP3 பாடல்களைக் கேட்கக்கூடிய சிறிய உபகரணமாகும். பிரித்தானியரான கேன் க்ரமர் என்பவர் 1979 இல் இந்த உபகரணம் குறித்த ஒரு யோசனையினை முன்வைத்திருந்தார்.



## 2001

**Apple ஐபொட்**

Apple நிறுவனத்தின் நிறுவுனர் ஸ்டீவ் ஜொப்ஸ், Apple ஐபொட்டினை அறிமுகம் செய்தார். அதேவேளை, இசை மற்றும் பாடல் தொகுதிகளை இணையத்தினூடாகக் கொள்வனவு செய்யக்கூடிய itunes இணையத்தளம் உருவாக்கப்பட்டது.





## 2006

**ஸ்போடிஃபை**

நேரடி இணைய 'ஸ்ட்ரீமிங்' தொழில்நுட்பம் கொண்ட பாடல்களை பெருமளவில் செவிமடுக்கக்கூடிய இணையத்தளம் உருவானது.

Spotify



## 2001

**Apple ஐஃபோன்**

Apple ஐஃபோனின் அறிமுகத்துடன் இசை ரசனை முறையில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன.

-அஷ்லிதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வரலாறு பாடத்தில் மாணவர்களை நூறு புள்ளிகள் பெறச்செய்யும் பார்வையற்ற ஆசிரியரின் சாதனை!





கண்பார்வையற்ற ஓர் இளம் ஆசிரியர் தன்னிடம் கற்கும் மாணவர்களை நூற்றுக்கு நூறு வீதம் தேர்ச்சி பெறச் செய்கின்றாராம். தமிழ் நாட்டின் சென்னையைச் சேர்ந்த இவரது பெயர் சக்திவேல்.

வரலாற்று ஆசிரியரான இவர் கற்பிக்கும் பாணி வித்தியாசமாக இருப்பதால்தான் மாணவர்களை இந்தளவிற்கு இவரால் தேர்ச்சிபெறச் செய்யமுடிகின்றதாம். இவர் பிறக்கும்போது இவருக்குப் பார்வை தெளிவாகவே இருந்துள்ளது. எட்டாம் வகுப்பில் படிக்கையில்தான் பார்வை மங்க ஆரம்பித்தது. தீவிர சிகிச்சையளித்தும் பலனில்லை. இறுதியில் 9 ஆம் வகுப்பில் கற்கையில் இவரது இரண்டு கண்களிலும் பார்வை முற்றிலும் இல்லாமல் போனது.

ஆயினும், சக்திவேல் முடங்கிவிடவில்லை. எதையாவது வாழ்க்கையில் சாதிக்கவேண்டும் என்று துணிவு கொண்டார். தன்னை பார்வையற்றோருக்கான பாடசாலையில் சேர்க்குமாறு பெற்றோரிடம் கேட்டார். அவர் விருப்பப்படியே அத்தகைய பாடசாலையில் அவர் சேர்க்கப்பட்டார். ஒரே வருடத்தில் அங்கு 'பிரெய்ல்' முறையை கற்றுத் தேர்ந்ததுடன், 10 ஆம் வகுப்பிற்கான பொதுப் பரீட்சையில் கூடிய மதிப்பெண்களைப் பெற்று சாதனையை நிகழ்த்தினார். தொடர்ந்து மாநிலக் கல்லூரியில் BA வரலாறு பாடத்திலும் சித்திபெற்று பட்டதாரியானார்.



தொடர்ந்து ஆசிரியர் போட்டித் தேர்ச்சி பரீட்சையிலும் தேர்ச்சி பெற்று திருச்செங்கோடு என்ற ஊரிலுள்ள ஒரு பாடசாலையில் ஆசிரியராக கடமையேற்றார். நாளடைவில் அதாவது 2005 ஆம் ஆண்டில் இவரது சொந்த ஊரில் இவர் கற்ற பாடசாலைக்கே ஆசிரியர்ாகப் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றார். இதனைத் தொடர்ந்து இந்தப் பாடசாலையில் திருப்புமுனையொன்றை இவர் ஏற்படுத்தினார். அந்தவகையில், இவரிடம் வரலாற்றுப் பாடம் கற்ற மாணவர்கள் நூற்றுக்கு நூறு புள்ளிகளை பெறத் தொடங்கினர்.

பொதுவாக வரலாற்றுப் பாடம் என்றாலே மாணவர்கள் கசப்பதாகக் கூறுவர். ஆனால், ஆசிரியர் சக்திவேலிடம் கற்கும் மாணவர்களுக்கு அவ்வாறல்ல. காரணம் அவர் வரலாற்றுப் பாடத்தினை புதிய முறையில் கதை மாதிரிக் கூறி புரிய வைக்கின்றார். வரலாற்றுச் சம்பவத்தில் மன்னர் வாள் எடுத்துச் சுற்றினார் என்றால், தானும் ஒரு போலிக் கத்தியொன்றைக் கையிலெடுத்து சுழற்றிக் காட்டி நாடகப்பாணியில் விபரித்து பாடங்களைப் புரியவைக்கின்றார். இந்த கல்வி புகட்டல் முறையானது, மாணவர்களுக்கு நன்றாகவே பிடித்துவிட்டது. இதனால், ஆர்வத்துடன் படித்தனர். அதுமட்டுமன்றி, ஒலிப்பதிவு கெசட் மூலமும் பாடங்களைப் பதிவுசெய்து கொடுத்து அவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தினார்.

மாற்றுத்திறனாளியான ஆசிரியர் சக்திவேலின் இந்த முயற்சியையும், திறமையையும் அதிகாரிகள் வெகுவாகப் பாராட்டி வருகின்றனர். "மாணவர்களின் எதிர்காலத்திற்கு நான் வழிகாட்டுகிறேன். எனது நிகழ்காலத்திற்கு எனது மாணவர்கள் வழிகாட்டுகின்றனர். இவர்களின் துணை உள்ளவரை பார்வை எனக்கு ஒரு பொருட்டல்ல, கற்றலில் சிறந்த மாணவர்களை நான் உருவாக்கிக்கொண்டே இருப்பேன்" இவ்வாறு கூறுகின்றார் ஆசிரியர் சக்திவேல்.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2014, ஜனவரி மாதம் 22 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday January 22, 2014.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org